# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 82 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 31 புதன் , 14/05/2014

www.putheyavan.com



நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்ரிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com


## ஜனாதிபதி தேர்தலா? பொதுத்தேர்தலா? அரசாங்கத்துக்குள் ஆராட்ச்சி

**(கொழும்பு)**இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் முதலில் நடைபெறவேண்டுமா? அல்லது பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் அரசாங்கத்துக்குள் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு அந்தக்குழுக்கள் பல்வேறு மட்டங்களில் ஆய்வுகளை நடத்தின.

இதன்படி முதல் குழு ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்படுமானால் அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, வடக்குகிழக்கு தமிழர்கள் வாக்களிக்காவிட்டால் கூட 10 இலட்சம் வாக்குகளால் (11ம் பக்கம்பார்க்க)

## மக்களை பாதிக்காத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அமைய வேண்டும்- ஜனாதிபதி

**(கொழும்பு)**மக்களின் விரோதத்தை சம்பாதிக்காத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அமைய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உரிமைகளை வென்றெடுக்கும் அதேவேளை, மக்களுக்கு எவ்வாறு சேவையாற்ற முடியும் என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும்.பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்ற (11ம் பக்கம்பார்க்க)

# உறவுகளின் அஞ்சலிக்குத்தடையா? உணர்வுகளை தடுக்க முடியுமா?

## கவனம் செலுத்தப்படும் என்கிறது ஐ.நா

**(நியூயோர்க்)** இறுதிப்போரின் போது இறந்த உறவுகளுக்கு வடக்கு மக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளமை குறித்து அவதானம் செலுத்தவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் நடைபெற்ற போது, கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கிய பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக், அந்த தடை குறித்து தாம் அறியவில்லை. எனினும் அது தொடர்பில் ஆராய்வதாக குறிப்பிட்டார்.

இலங்கையின் இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய கடந்த வாரம் விடுத்திருந்த எச்சரிக்கை ஒன்றில் போரில் இறந்தவர்களுக்காக பொதுநிகழ்வுகள் நடத்தப்படுவதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்திருந்தார்.

## பிரிய மனமின்றி பிரியாவிடை பெற்ற மன்மோகன்



**(இந்தியா)** இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலக ஊழியர்கள் சுமார் 110 பேர், சௌத் ப்ளாக்கில் எழுந்து நின்றபடி பிரியாவிடை கொடுத்தனர்.

நெகிழ்ச்சியான இந்த நிகழ்வின்போது, சிலரது விழிகளில் கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்தன என த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மே 17-ம் தேதி பிரதமர் பதவியில் இருந்து விடைபெறும் (11ம் பக்கம்பார்க்க)

## உயர்தரம் இல்லாவிட்டால் பரவாயில்லை வீரவன்சவுக்கு வாசிக்க வென்றாலும் தெரியும் தானே! எஸ்.பி

**(கொழும்பு)** உயர்தரம் சித்திபெறா விட்டாலும் உயர்கல்வி இல்லாவிட்டாலும் அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு புத்தகங்கள் வாசித்து படித்துக் கொள்ள முடியும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி சம்பிரதாயம் பொருளாதார தத்துவம் தொடர்பில் சிறிதளவேனும் தெரிந்திருக்க வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச தொடர்பில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விமர்சித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிபி.ஜயசுந்தர ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வருவதாகவும் எஸ்.பி.திஸாநாயக்க பிபி.ஜயசுந்தரவை பாராட்டிப் பேசுவதால் அவரது அமைச்சரவை பத்திரங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கப்படுவதாகவும் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் (12) ரிவி தெரணவில் ஒளிபரப்பான 360 (11ம்

## காலம் கடத்தப்படுகிறது ஆட்கொணர்வு மனு பாதிக்கப்பட்டவர்கள் போராட்டத்திற்கு அழைப்பு

**(முல்லைத்தீவு)** சிறீலங்கா இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கடந்த 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆட்கொணர்வு மனு நீதிமன்றத்தினால் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இம்மாதம் 08.05.2014 அன்று இந்த ஆட்கொணர்வு மனு முல்லைத்தீவு நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழமை போன்றே அரசதரப்பு வழக்கறிஞர் தனது குடும்ப பிரச்சினையை காரணம் காட்டி வழக்கை அடுத்த மாதம் ஒத்திவைக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்று வரும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். 2009 மே மாதத்தில் பல ஆயிரக்கணக்கான போராளிகளும், பொது மக்களும் சிறீலங்கா இராணுவத்தினிடம் சரணடைந்திருந்தனர். இவ்வாறு சரணடைந்தவர்களில் பெரும்பாலானோர் சிறீலங்கா அரசால் காணமல் போகச் செய்யப்பட்டுள்ளனர் (11ம் பக்கம்பார்க்க)

## பாப்பரசர் மன்னிப்புக் கோரவேண்டும் பொதுபல சேனா

**(கொழும்பு)** பாப்பரசர் புனித பிரான்ஸிஸ் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் மன்னிப்புக் கோர வேண்டும் என பௌத்த தீவிர வாத அமைப்புகளான பொதுபல சேனாவும், ராவணா சக்தி அமைப்பும் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

இலங்கையில் மத நல்லிணக்கம் இல்லையென பாப்பரசர் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோர வேண்டும். அதன் பின்னர்தான் இங்கு வரவேண்டும்.

எமது நாட்டில் மதங்களுக்கிடையே மோதல்கள் கிடையாது.

பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து மதத்தினரும் இங்கு நல்லிணக்கத்துடனேயே வாழ்கின்றனர் .(11ம் பக்கம்பார்க்க)

## குற்றவாளியைக்கண்டு அச்சப்படுகிறது அரசு- ஞானம் வந்தது விமலுக்கு

**(கொழும்பு)** நாட்டின் பொருளாதாரத்தை இரண்டு மூன்று பேர் கொண்ட குழுவே கையாள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஐமசுமு அரசாங்கத்தின் வீடமைப்பு, பொறியல், நிர்மாணம் மற்றும் பொது வசதிகள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பி.பி.ஜயசுந்தர என்பவர் சந்திரிகா ஆட்சி காலத்தில் அரச நிறுவனங்களை விற்றவர் எனவும் அவர் இன்று சிறையில் இருக்க வேண்டிய நபர் எனவும் (11ம் பக்கம்பார்க்க)

## நீதிகோரி பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன் போராட்டம்: நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

**(பிரித்தானியா)** ஈழத் தமிழினத்தின் மீதான சிறிலங்கா அரசின் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் உச்சமாக அமைந்த முள்ளிவாய்க்கால் பெருவலியின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு புலம்பெயர் தேசமெங்கும் தொடர் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மே-18 தமிழீழத் தேசிய நாளினை மையப்படுத்தி நாடுகடந்த தமிழீழ அரசாங்கதினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பன்முகச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக தமிழர்களுக்கான பரிகார நீதிகோரி, (11ம் பக்கம்பார்க்க)


Ishara Motors
Spare parts sales dealer for David Pieris Motor Company
Distributor for MRF Tyre & Tube David Pieris Motor Company Ltd
BAJAJ
T.p-023 2223464 Mob: 077 7949106 E-mail : isharamotorsmn@gmail.com



உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........


PUBLIC LIBRARY JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மாற்று திரணாளிகளுக்கான தேசிய மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ள சென்ற மன்னார்-மாற்றாற்றல் உள்ளோர் புனர் வாழ்வு சங்கத்தின் விளையாட்டு வீரர்களையும்,சங்க பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## இன முரண்பாடுகளை அரசாங்கமே தூண்டுகின்றது ஜே.வி.பி.



சிங்கள முஸ்லிம் முரண்பாடுகளை அரசாங்கமே தூண்டு கின்றது என ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டின் முஸ்லிம் சமூகம் மிகவும் அமைதியுடன் இருப்பதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகப் பற்றற் காவல்துறையினர் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட தரப்பினரால் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கும் அநீதிகளை முஸ்லிம்கள் அமைதியுடன் பொறுத்துக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

வர்த்தக சமூகத்தினரும் ஏனைய மக்களும் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சாதாரண மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய மாநாடு

பிரித்தானிய தமிழர் பேரவையும் , தமிழர்களுக்கான அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவும் இணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை பிரித்தானிய பாராளுமன்றத்தில் இம் மாநாட்டை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக இலங்கை இனவாத அரசுகளினால் கட்டமைக்கப்பட்ட ரீதியான பாலியல் வன்முறைகள் தொடர்ச்சியாக இலங்கை இராணுவத்தினரால் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


குறிப்பாக 2009ம் ஆண்டு மே மாத இறுதி யுத்த காலப்பகுதியில் பல தமிழ் பெண்கள் கொடுரமான பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டும் , 80,000க்கு மேற்பட்ட இளம் தமிழ் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டும் , தொடர்ச்சியாக தமிழர் தாயகப் பகுதியில் கட்டாய கருத்தடை என்ற போர்வையில் தமிழ் பெண்கள் மூலம் இன கருவறுப்பும் நடைபெற்று வருகிறது.


இறுதி யுத்த காலப்பகுதியில் பாதிப்புகளுக்கு உள்ளாகி புலம்பெயர் நாட்டில் வசித்துவரும் பெண்கள் அல்லது பாதிப்புக்கு உள்ளான பெண்களின் உறவினர்கள் , நண்பர்கள் கலந்து கொண்டு தமக்கு நேர்ந்த கொடூரங்களை இம் மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும்

மகளிர் அமைப்புகளின் உறுப்பினர்கள் , சட்டத்தரணிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் , வன்முறைகள் சம்மந்தமான ஆய்வாளர்கள் ஆகியோரிடம் பகிர்ந்து கொள் வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை பிரித்தானிய தமிழர் பேரவையினர் ஏற்படுத்தியுள்ளனர்.

இத்துடன் எதிர்வரும் மே18 வுசயகயடபயச ளுஙரயசந இல் நடைபெற இருக்கும் நினைவுகூறல் நிகழ்வில் பிரித்தானியா வாழ் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொண்டு மீண்டும் ஒரு முறை சர்வதேசத்திற்கு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் திட்ட மிட்ட இனப்படுகொலையை உரக்கக்கூறுவோம் .

# நாடாளுமன்றத் தேர்வுக் குழு டக்ளஸ்சின் அழைப்பை நிராகரித்தது த.தே.கூ





இனப்பிரச்சினை தீர்வுக்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவே சிறந்த வழி" இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் பங்கேற்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீண்டும் விடுத்தி ருக்கும் அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்துள்ளனர்.

பல தசாப்தங்களாக நீடித்திருக்கும் இனப்பிரச்சினையை ஒரு காலக் கெடுவுக்குள் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவாலே யே முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிபிசி தமிழோசையிடம் கூறினார்.

இப்பிரச்சினைக்கான தீர்வு தொடர் பில் அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையே ஒரு அனுசரணையாளராக பேச்சுவார்த்தைகளை தொடங்க தென் ஆப்ரிக்கா உதவ முன்வந்துள்ள நிலையில், அதற்கு குந்தகம் ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையே அமைச்சரின் முன்னெடுப்பு என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

இலங்கையில் தமிழர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் எனக் கூறும் டக்ளஸ் தேவானந்தா, நல்ல பல சந்தர்பங்கள் கூட்டமைப்பின் [illegible]

வெற்றிபெறவில்லை என்றும், அதுபோன்ற ஒரு நிலை மீண்டும் ஏற்படக் கூடாது எனவும் கூறுகிறார்.

நாட்டின் வடக்கே இராணுவத்தின் பிரசன்னம், ஆட்கள் கைது செய்யப்படுவது போன்ற பிரச்சினைகளையே தீர்க்க முடியாத அமைச்சரால் இனப் பிரச்சினைக்கான தீர்வில் என்ன பங்காற்ற முடியும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்புகிறார்.

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தடைபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்தது.

நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் மூலமாக ஒரு தீர்வு எட்டப் படாவிட்டால் அரசில் தொடருவது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டியத் தேவை ஏற்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளதையும் கூட்டமைப்பினர் விமர்சித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



புதியவன்
පුදියවන් PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

# கருத்துக்கணிப்பு நிஜமாகுமா?

உலகத்தின் மிகப்பெரிய சனநாயக நாடாகிய இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்பது சுற்றுக்களாக முடிவுற்றுள்ளது.

மிகப்பெரிய அளவில் வன்முறைச்சம்பவங்கள் எதுவும் இன்றி நிறைவடைந்துள்ளன.

இந்தியாவில் சனநாயகம் என்பது பெயரளவில் மட்டும் தான் உள்ளது எனும் விமர்சனமும் இல்லாமலில்லை இருந்தும் பல மொழி பல்லினாக் கலாசாரம் என பிரிவுகளை கொண்ட நாடாகும் இவற்றை நிர்வாக படுத்துவது என்பது சாதாரணமான விடயமாக எடுத்து கொள்ள முடியாது.

இந்தியாவில் இலங்கையைப் போலில்லாமல் தேர்தலை தேர்தல் ஆணயமே நடாத்துவதால் மிக வலுவான முறையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைப்பிடிக்கபட்டன.

தற்போது தேர்தல் நிறைவு பெற்று விட்டன இன்னும் இரண்டு தினத்தில் முடிவுகள் வெளிவந்துவிடும் ஆனால் கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் நோக்கும் போது தேசிய சனநாயகக் கூட்டனி (பா.ஜ.க) தனிப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் என தெரிவிக்க பட்டுளது. மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக்கூட்டணி மிகக் குறைந்த அளவிலான இடங்களையே பெறும் என பல்வேறு ஊடகங்களால் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் கோடி காட்டியுள்ளன ஆனால் இந்தியாவின் கருத்துக்கணிப்புக்கள் என்பது வெறும் எடுகோளே எனும் விவாதமும் எதிர்கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது.

அதிலும் உண்மையில்லாமலில்லை கடந்த இரண்டு மக்களவைத்தேர்தலிலும் 2004, 2009 வி.ஜே.பி.யே ஆட்சியமைக்கும் என கருத்துக்கணிப்புக்கள் வெளிவந்தன ஆனால் நடந்தது என்ன. அதே போல் 2011ம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்ட சபைத்தேர்தலிலும் தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும் என தெரிவிக்கபட்டது. ஆனால் எதிர்கட்சி அந்தஸ்தயே இழந்து விட்டது.

ஆனால் இந்த கருத்துக் கணிப்பில் மூன்றாவது அணி தொடர்பில் மிகக் குறைான மதிப்பீடே வெளிவந்துள்ளன.அவர்களை சாதாரணமாக நோக்க முடியாது.

எனவே இந்திய ஆட்சிமாற்றத்தினூடாக ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்க வேண்டுமாக இருந்தால் மத்தியில் தொங்கு பாராளுமன்றம் ஏற்பட வேண்டும் அதற்கு ஜெயலலிதா துணை நிற்க வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் தனிப்பெரும் பான்மையுடன் எந்த கட்சி ஆட்சிக்ககு வந்தாலும் ஈழத்தமிழர் நிலையில் முன்னேற்றம்.

ஏற்பட வாய்ப்பு மிகக்குறைவு ஆகவே இரண்டு தினங்களில் ஈழத்தமிழருக்கு ஏறுமுகமா? இறங்கு நிலையா என வெளிப்படும்.

# பவானிசாகரில் இலங்கை அகதிகள் சாலை மறியல்

ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் மூதாட்டி கொலை வழக்கில் குற்றவாளிகளை கைது செய்யக்கோரி இலங்கை அகதிகள் சாலை மறியல் நடத்தினர். அப்போது நடந்த கல்வீச்சில் பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் காயம் அடைந்தார். ஜீப் கண்ணாடி நொறுங்கியது. இதனால் அங்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளார்கள். பவானிசாகர் இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்தவர் பெலிஸ் சிட்ரா குருஸ் (வயது 72). கடந்த 10 ஆம் திகதி முடுக்கன்துறை பவானி ஆற்றின் கரையோரம் விறகு பொறுக்குவதற்காக சென்ற இவர் நிர்வாணமாக உடல் மீது பாறாங்கல் வைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இதுகுறித்து தகவல் கிடைத்ததும் பவானிசாகர் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து விசாரணை நடத்த சத்தியமங்கலம் துணை பொலிஸ் அத்தியட்சகர் மோகன் உத்தரவிட்டார். அதன் பேரில் பவானிசாகர் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) முத்துசாமி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. மூதாட்டியை கொலை செய்த குற்றவாளிகளை தனிப்படையினர் வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில் முடுக்கன்துறையைச் சேர்ந்த பழனிசாமி மகன் ரமணீதரன் (22) என்பவர் பெலிஸ் சிட்ரா குரூசை கொலை செய்தது விசாரணையில் தெரியவந்தது. அதைத்தொடர்ந்து பொலிஸ் நேற்று மதியம் ரமணீதரனை கைது செய்தனர்.

ரமணீதரன் அளித்த வாக்குமூலத்தில், நானும் என்னுடைய நண்பர்களும் சேர்ந்து கடந்த 10 ஆம் திகதி முடுக்கன்துறை பவானி ஆற்றின் கரையோரம் கறி சமைத்து சாப்பிட்டு மது அருந்தினோம். பின்னர் நாங்கள் அனைவரும் தனித்தனியாக வீட்டிற்கு புறப்பட்டு சென்றோம். நான் காட்டுப்பகுதியில் சென்ற போது அங்கு பெலிஸ் சிட்ரா குருஸ் விறகு பொறுக்கிக்கொண்டு இருந்தார். போதை தலைக்கேறிய நான் அவரை கற்பழிக்க முயன்றேன். அப்போது அவர் கூச்சல் போட்டார். மேலும் அவர் இதுகுறித்து வெளியில் சொல்லி விடுவாரோ? என்று பயந்து நான் அவரை கொலை செய்ய முடிவுசெய்தேன். உடனே அவரை கழுத்தை நெரித்து கொலை செய்து அவரின் உடலின் மேல் பெரிய கல்லை வைத்து விட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டேன் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே நேற்று மாலை 3 மணி அளவில் இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த 1000-க்கும் மேற்பட்டோர் மேட்டுப்பாளையம்-பவானிசாகர் சந்திப்பு ரோட்டில் ஒன்று திரண்டனர். பின்னர் அவர்கள் மூதாட்டி கொலையில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்று கூறி மேட்டுப்பாளையம் வீதியில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் ரோட்டில் ஏராளமான கற்களையும், முட்களையும் குவித்து வைத்தனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவல் கிடைத்ததும் சத்தியமங்கலம் பொலிஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் நாகேந்திரன் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

வீதியில் குவித்து வைத்துள்ள கற்கள் மற்றும் முட்களை அகற்ற வேண்டும் என்று போராட்டக்காரர்களிடம் கூறினர். அதற்கு இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த பரமேஸ்வரன் என்பவரின் மகன் தம்பிராஜ் (23) என்பவர் எதிர்ப்பு தெரிவித்ததாக தெரிகிறது. இதனால் தம்பிராஜை பொலிஸார் வாகனத்தில் ஏற்ற முயன்றதாக தெரிகிறது. அப்போது அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் ஆத்திரமடைந்து பொலிஸ் ஜீப் மீது கல்வீசி தாக்கினர். இதில் ஜீப்பின் முன்பக்க கண்ணாடி நொறுங்கியது.

ஜீப்புக்கு அருகே பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் நாகேந்திரனுக்கும் காயங்கள் ஏற்பட்டன. உடனே பொலிஸார் நாகேந்திரனை சிகிச்சைக்காக சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது:

# அமைச்சர் றிசாட் மீது காடழிப்புக் குற்றச்சாட்டு



கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியூதீன் காடழிப்பில் ஈடுபட்டுள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

மக்களைக் குடியேற்று வதற்காக வனவிலங்க சரணாலயங்களுக்கு சொந்த மான பாரியளவிலான காணிகளை பயன் படுத்தியுள்ளதாக அமைச்சர் றிசாட் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுற்றாடல் நீதிக்கான மையம், சுற்றாடல் பாதுகாப்பு அறக்கட்டளை, இயற்கை வளங்களுக்கு பௌத்த பேரவை மற்றும் இலங்கை சுற்றாடல் காங்கிரஸ் ஆகிய நா ன்கு சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் கூட்டாக இணைந்து தெரிவித்துள்ளன.

அமைச்சர் பதியூதீன் சுமார் 18000 ஏக்கர் காணியை சட்டவிரோதமான முறையில் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன.மக்களை மீள்குடியேற்றும் போர்வையில் இலங்கை சுற்றாடல் சட்டத்திற்கு புறம்பான வகையில் காடுகள் அழிக்கப்படுகின்றன என குறிப்பிட்டுள்ளன.

முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு காடுகள் அழிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மடு பகுதியிலும் காணிகளை அபகரிக்க அமைச்சர் முயற்சித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் முதற்கட்ட இராணுவ ஆட்சேர்ப்பில் 50 விண்ணப்பங்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற முதற்கட்ட இராணுவ ஆட்சேர்ப்பில் 50 வரையான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

கடந்த 8ம் திகதி முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிர தேச செயலகத்தில் முதற்கட்ட ஆட்சேர்ப்பு நடைபெற்றது.

இராணுவத்தில் பொறியியல், பிளம்பிங், வெல்டிங், மோட்டார் இயந்திரம் திருத்தல், மின்சாரம் ஆகிய துறைகளுக்கு ஆட்சேர்க்கும் பணிகள் முல்லைத்தீவு மாவட்ட த்தின் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டத்தில் 50 வரையிலானவர்கள் இராணுவத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கு அடுத்தகட்ட நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு அதில் தகுதிபெறுபவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிவிக் கப்பட்டது.

இதேபோன்று ஒட்டுசுட்டான், புதுமாத்தளன், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலும் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இராணுவத்துக்கு தமிழ் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அவர்கள் தமது சொந்த இடங்களிலேயே அவர்களது குடும்பங்களுக்கு நெருக்கமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை



இயேசு இம்மண்ணில் பிறந்த போது திருச்சட்டத்திற்கு உட்பட்டு (கலா 4:5) பிறந்தார். தலைப்பேறான அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (வி.ப 13: 11-16) என்ற திருச்சட்டத்தை நிறைவேற்றவும், நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார் (மலா 3:1) என்ற இறைவாக்குக்கு ஏற்பவும், பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியாகவும், இஸ்ராயேல் மக்களுக்குப் பெருமையாகவும் (லூக் 2:32) ஆண்டவர் இயேசுவை அன்னை ஆலயத்துக்கு கொண்டுவருகிறாள்.

ஏன்கடவுளே உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன் (எபி 10:7) என்று மகன் தந்தைக்கு வாக்கு கொடுக்க வழியமைத்ததன் மூலமாக அன்னை அர்ப்பண வாழ்வின் உச்சநிலையை அடைந்து விட்டார். இயேசுவோடு அன்னையின் பணி முடியவில்லை மாறாக இயேசுவின் பணியை முன்னெடுக்க திருத்தூதர்களுக்கு முன்னு தாரணமாக அன்னை விளங்குகிறாள். இயேசுவின் மறையுடலாக விளங்கும் திருச்சபையின் பக்கபலமாக இருந்து, அர்ப்பண வாழ்வை முன்னெடுக்கும் மக்களுக்கு என்றும் அடைக்கலமாக திகழுகிறாள் எமது அன்னை. உருவிலானைக் கருவிலே தாங்கிய மரியன்னையின் கன்னிமையும், தாய்மையும் மனுக்குலத்திற்கு ஓர் ஒப்பற்ற செல்வமெனலாம். ஆனால் அன்னையின் மாண்பினை மதிக்காக மனிதர்கள் பலரையும் எங்கள் மத்தியில் காணமுடிகிறது. அருள் நிறைந்தவள் அடைக்கலம் தருபவள் ஆண்டவரினதும், அனைத்து மக்களினதும் தாயானவள் இரக்கம் நிறைந்தவள் இடைவிடாது தியானிப்பவள் தாழ்சியின் சிகரமானவள் தூய ஆவியின் பத்தினியானவள் வியாகுலங்களை ஏற்றவள் விண்ணக மண்ணக அரசியானவள் என விவிலியம் போற்றும் அன்னையை குறைத்துப் பேசுபவர்களுக்கு நாம் தகுந்த வளக்கம் கொடுக்க முன்வரவேண்டும். வார்த்தைக்கு உயிர் கொடுத்து, இறைவனின் திட்டத்தில் தனியிடம் பெற்று, மீட்பு வரலாற்றிலே இயேசுவோடு இணைந்து செயலாற்றிய அன்னையின் மகிமையை உலகிற்கு உணர்த்த வேண்டியது அன்னையின் பிள்ளைகளாகிய எமது கடமையாகும். ஆன்னையின் விசுவாசம், அர்ப்பணம், ஏழ்மை, துணிவு, மீட்புப் பணியில் ஈடுபாடு, பரிந்துரை, புண்ணய வாழ்வு போன்றவை எமது உள்ளங்களிலும் இருப்பிடம் கொள்ள வேண்டும். ஆகட்டும் என்ற வார்த்தையினாலே தன்னை ஆண்டவருக்கு கொடுத்த அன்னை மரியாளை முன்னுமதரணமாகக் கொண்டு, நாங்களும் எங்களை ஆண்டவருக்கு முற்றுமுழுதாக ஒப்புக்கொடுக்க முன்வருவோம்.

ஆண்டவர் இயேசுவை ஆலயத்துக்கு கொண்டு சென்றது போல எங்களையும் அன்னை தன் கரத்திலேந்தி ஆண்டவரிடம் தூக்கிச் செல்ல அனுமதிப்போம். அர்ப்பண வாழ்வின் அடைக்கலமே என அன்னையை வாயாரப் பாடி அவளது பாசமும், நேசமும், அரவணைப்பும் எங்கள் ஒவ்வொருவரையும் வழிநடத்தும் என்ற நம்பிக்கையில் வாழுவோம்.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி**

# திருச்சி முகாமில் இலங்கை அகதி தற்கொலை சிறைச்சாலை அதிகாரிகளால் மூடி மறைப்பு



திருச்சியில் சிறப்பு அகதிகள் முகாமில் இலங்கை அகதி ஒருவர் தற்கொலை செய்துக் கொண்ட நிலையில், அதனை சிறைச சாலையின் அதிகாரிகள் மறைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவரூபன் என்ற குறித்த அகதி, கடந்த 6ம் திகதி மருத்து பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, அவர் தற்கொலை செய்துக் கொள்ளும் எண்ணத்துடன் இருப்பதாகவும் அவரை வைத்திய சாலையில் அனு மதிக்குமாறும் வைத்தியர்கள் கோரியுள்ளனர்.

எனினும் சிறைச்சாலை அதிகாரிகள் இதற்கு மறுப்பு தெரிவித்து அவரை மீண்டும் சிறையில் அடைத்துள்ளனர்.
இந்த நிலையில் கடந்த 9ம் திகதி அவர் தற்கொலை செய்துக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த தகவலை திருச்சி காவற்துறையினர் ஊடகங்களுக்கு வழங்கவில்லை என்றும் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளது.

# வெசாக் வாரத்தை முன்னிட்டு மதுபான இறைச்சி கடைகள் மூடல்

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மதுபானக் கடைகள், இறைச்சி கடைகள் மற்றும் களியாட்ட விடுதிகள் மூடப் படவுள்ளன.
எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு இவ்வாறு மூடப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித் துள்ளது.
நாட்டின் சகல மதுபானக் கடைகளும் எதிர்வரும் இரண்டு தினங்களுக்கு மூடப்பட வேண்டும் என கலால் திணைக்கள ஆணையாளர் பிரபாத் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார. உத்தரவினை மீறிச் செயற்படும் மதுபானசாலைகளை சுற்றி வளைத்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிராந்திய கலால் திணைக்கள அதிகாரி களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட அனைத்து கடைகள் வர்த்தக நிலையங்களிலும் இரண்டு நாட்களுக்கு இறைச்சி விற்பனை செய்யக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

**சித்திரை - 31 புதன்கிழமை 14.05.2014**

திதி: பூரணை பி.ப 1.05
நட்சத்திரம்:சித்திரை

சுப நேரம்:4.23 - 5.53 வரை
இராகு காலம்:11.53 - 1.23 வரை
எமகண்டம்: 7.23 - 8.53வரை



## இன்றைய பலன்

14.05.2014

**வழங்கியவர் மணிகண்டன்**



**மேஷம்**

இன்று, உங்களுக்கு அனுசரணையாக செயல்படுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மனதிலும், செயலிலும் புத்துணர்வு பெறுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சிறப்பாக இருக்கும். அரசு அதிகாரிகளின் உதவி பெற, அனுகூலம் உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.



**ரிஷபம்**

இன்று, நண்பர்களின் உதவி, பாசத்தினால் மனம் நெகிழ்வீர்கள். அன்றாட பணிகளில், முன்னேற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் வளர கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து தாராள பணவரவைத் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை பெறலாம்.



**மிதுனம்**

இன்று, சிலர் உங்களுக்கு உதவுவது போல, பாசாங்கு செய்து பணிகளில் இடையூறு ஏற்படுத்துவர். உண்மை உணர்ந்து, அவர்களிடம் இருந்து விலகுவீர்கள். தொழில் வளர்ச்சி சீராக, பணிகளில் நேரம் தவறாமையை பின்பற்ற வேண்டும். பணவரவு சுமாரான அளவில் கிடைக்கும்.



**கடகம்**

இன்று, உங்களிடம் பழகிய ஒருவர் அவமதிக்கும் நோக்கத்துடன் செயல்படுவார். இதை உணராமல் அவரிடம் சொந்த வி'யம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உருவாக கூடுதல் நேரம் பணிபுரிய நேரிடலாம். காலமுறை உணவுப் பழக்கம், உடல் நலம் காக்க உதவும். அவசியமற்ற வெளியூர் பயணத்தை தவிர்ப்பதால் நேரமும், பணமும் மிச்சமாகும்.



**சிம்மம்**

இன்று, வாழ்வில் புதிய நல் அனுபவங்களை பெறுவீர்கள். எதிரிகளால் இருந்த தொல்லை குறையும். தொழில் வளர்ச்சி பணியை, ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். நண்பருக்கு உதவும் வகையில், கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.



**கன்னி**

இன்று, எதிர்பாராத வகையில், அவசரப்பணி ஒன்று ஏற்பட்டு தொந்தரவு தரலாம். மனதில் கூடுதல் நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். சகதொழில் சார்ந்த நண்பரின் உதவியால், தொழில் நிலை சீராகும். பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும். உணவுப்பழக்கத்தில் கட்டுப்பாடு நல்லது.



**துலாம்**

இன்று, மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எந்த செயலிலும் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். ஆதாய பணவருமானம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.



**விருச்சிகம்**

இன்று, சிலர் லாபத்திற்காக, உங்களுக்கு பணம் கடனாகத் தரமுயற்சிப்பர். முக்கிய செலவு எதுவுமின்றி, தேவையற்ற வகையில் பணக்கடன் பெற வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு உதவும். உறவினர்களிடம் பேசுவதில், நிதான அணுகுமுறை நல்லது. சீரான ஓய்வு, உடல் நலம் காக்கும்.



**தனுசு**

இன்று, உங்கள் பேச்சில் இனிய வார்த்தை நிறைந்திருக்கும். மாறுபட்ட கருத்து உள்ளவரும் நல் எண்ணத்துடன் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**மகரம்**

இன்று, செயல்களில் சமூக நலன் பற்றிய அக்கறை அதிகரிக்கும். எவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். விரும்பிய உணவு வகை உண்டு மகிழ்வீர்கள். சுகமான நித்திரையும், இனிய கனவும் ஏற்படும்.



**கும்பம்**

இன்று, செயல்களில் மேம்போக்குத் தன்மை நிறைந்திருக்கும். இதனால் அன்றாட பணியில் குளறுபடி வரலாம். தொழில் நடைமுறை சீராக, புதிய யுக்திகளை பயன்படுத்த வேண்டும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும். உறவினர் வகையில், கூடுதல் பணச்செலவு ஏற்படலாம்.



**மீனம்**

இன்று சில பணிகள் நிறைவேற தாமதமாவதால், மனவருத்தம் கொள்வீர்கள். நியாய, தர்மம் கூடுதலாக கடைப்பிடிப்பதால், நன்மை வளரும். தொழில் வளர்ச்சி நிலை சுமாராக இருக்கும். பணவரவுக்கு மீறிய வகையில் செலவுகள் உருவாகும். தியானம், சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும்.

## சிந்திக்க சில வரிகள்

**தோல்வி உன்னை துரத்துகின்றது என்றால்!**
**நீ வெற்றியை நெருங்குகின்றாய் என்று அர்த்தம்...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



# டானியல் றெக்சியன் கொலை வழக்கில் கைதானவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர் கட்சித்தலைவரும் ஈபிடிபியின் முன்னாள் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்டமூவருக்கும் எதிர் வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் டானியல் றெக்சியன் கொலை செய்யப் பட்டமை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் உள் ளிட்ட மூவரும் இன்று யாழ்.ஊர்காவற் றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற் துறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் வீட்டில் இருந்து சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். சம்பத்தினையடுத்து முன் னாள் வடக்கு மாகாணசபையின் எதிர்க் கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன் றெக்சியனின் மனைவி அனிதா மற்றும் ஆட்டோ சாரதி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தர வின் படி விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்தனர்.

கொலை தொடர்பிலான வழக்கு இன்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நீதி பதி லெனின்குமார். தலைமையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி பிரதான சந்தேகநபரான கமலேந் திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# மே 18 ஆம் திகதியை கரி நாளாக நினைவுகூருவோம் - 18 மே இயக்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன் துயரங்கள் ஊடாக பயணித்த காலம் ஐந் தாண்டுகளைக் கடக்கின்றது. முள்ளி வாய்க்காலில் மூர்ச்சையாகிப் போனவர களுக்கு எந்தப் பெறுமதியையும் தராத உலகம் நம்மை வெறுங்கையோடு பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கின்றது. இந்த அலைந்துழல்வு வாழ்க்கைப் பாகத்தில் நம் மிடம் எஞ்சியிருப்பதெல்லாம் எம் மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளின் நினை வுகள் மட்டும்தான்.

முள்ளிவாய்க்கால் பறித்துக் கொண்டவை களிலிருந்து மிச்ச மாய் இருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள முயற்சிக் கின்றோம். இழந்தவை களும் அதன் துயர வலிகளும் அந்த நினை வுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின் றோம். ஆறாத வடுவாகி நிற்கும் முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை 40 ஆயிரம் தமிழ் உயிர்களைத் தின்றதாக ஐ.நா சொல் கின்றது. களத்தில் நின்ற தமிழர்களுக்குத் தான் தெரியும் இன்னும் எத்தனை ஆயிரம் கொலைகள் சமநேரத்தில் நிகழ்ந்தவை என்று. தாயின் கருவில் இருந்த சிசு தொடக் கம் நாளை கட்டையேறத் தயாராயிருந்த மூத்தோர் வரைக்கும் கண் மூடித்தன மாகக் கொன்றொழித்தவர்கள் வெற்றியைக் கொண்டாடுகையில் நாம் ஒன்று கூடி ஒரு துளி கண்ணீரைக் காணிக்கையாக்கும் வழி வகையின்றி நிற்கின்றோம்.

இந்தக் காயங்களை சொற்களுக்குள் அடக்கி விட முடியாது. நம் அவலத்திற்கு மொழியில்லை. அதனால் தான் அது இன்னமும் மௌனித்தே கிடக்கின்றது. இந்த நாள்களில் நம்மிடம் இருக்கும் துயர் வலிமை பெற வேண்டும். முள்ளிவாய்க்கால் தந்த துயர நினைவுகளை நினந்துருகுதல் அந்த வலிமையைத் தரும் கணங்களாக இருக்கும். மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மரணித்த அனைத்து மக்களின் மரணப் பெறுமதியையும் கனதியாக்குங்கள். அன் றைய தினத்தை கரிநாளாகக் கடைப்பிடிப் போம். அதற்காக உங்கள் வீடுகளில் மே 18 ஆம் திகதி மாலை 6.10 மணிக்கு ஈகைச் சுடரேற்றுங்கள்.

அந்தக் குறுகிய வன்முறை வெளியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக் காக ஒரு நிமிட அக வணக்கத்தைச் செலுத் துங்கள். இந்த நாள்களில், மௌனித்த அந்த ஆன்மாக்கள் மேன்மை பெறட்டும். அவைஇ நமக்கு வலிமை தரட்டும்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் புலம்பெயர் தேசமெங்கும் செயல்முனைப்புகள்

(யாழ்ப்பாணம்)
மே-18 தமிழீழத் தேசிய துக்க நாளினை மையப்படுத்திய முள்ளிவாய்க்கால் ஐந்தா மாண்டு நினைவேந்தல் வாரத்தில், புலம் பெயர் தேசமெங்கும் தொடர் செயல்முனைப் புகள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மே-12 முதல் 18 வரை நினைவேந்தல வாரமாக கடைப்பிடிக்கபடும் நிலையில், இந்நாட் களில் வணக்க நிகழ்வுகள், சர்வமத வழி பாடுகள், கவனயீர்ப்பு நிகழ்வுகள்,சிறிலங்கா புறக்கணிப்பு மாநாடு, தமிழீழத் தேசிய அட்டை வழங்கல் என பன்முகச் செயற் பாடுகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதனொரு அங்கமாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் சுவிசில் நினை வேந்தல் வணக்க வார நிகழ்வுகள் நா. தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகளால் முன்னெ டுக்கப்பட்டுள்ளது. லண்டன் பணியகத்தில் இடம்பெற்றிருந்த நினைவேந்தல் நிகழ்வில் முள்ளிவாய்க்கால் மண்பேழைக்கு வணக்கம் செலுத்தப்பட்டுள்ளமை உணர்வுபூர்வமான நிகழ்வாக அமைந்துள்ளது.

இதுதொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங் கத்தின் பொதுசன விவகாரங்கள் அமைச்சு வெளியிட்டுள்ள பரப்புரைக் குறிப்பு ஈழத் தமிழினத்தின் மீதான சிங்கள அரசினது கட் டமைக்கப்பட்ட இனஅழிப்பின் உச்சமாக மே 18. 2009ம் ஆண்டில் கொத்துக் கொத்தாக பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ்மக்களின் அரசியல் பெருவிருப்பினை வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளி யை உருவாக்கி நிகழ்வுபூர்மாக உலகிற்கு பறைசாற்றி நிமிர்ந்திருந்த நடைமுறைத் தமிழீழ அரசு அழிக்கப்பட்டு தமிழர் தேசம் சிங்களத்தினால் முழுமையாக ஆக்கிரமிக் கப்பட்டது. இது தமிழீழம் நோக்கிய விடுதலைப் பயணத்தில் பெருந்துயர் எமை ஆட்கொண்ட துக்கநாள் ! இந்த நாட்களில் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் நரபலி எடுக்கப்பட்டு தமது இன்னுயிர்களை இழந்த எது உறவுகளையும் சிங்களத்தின் ஆக்கிர மிப்பை எதிர்த்து நின்று போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவேந்தி வணக்கம் செய்வோம். தமிழீழ தேசிய துக்க நாள் முள்ளிவாய்க்கால் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கியமான ஒரு கூட்டு நினைவு (collecti ve memory) ஆகும். யூதர்கள்மேல் நாசிக ளால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு ( holocaust) எவ்வாறு யூத மக்களிடையே ஒரு வரலாற்றுக் கூட்டு நினைவாக அமைந்ததோ அதேபோல தமிழர்களுக்கு, ஈழத்தமிழர் களுக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களுக்கும் முள்ளிவாய்க் கால் ஒரு முக்கியமான கூட்டுநினைவாக அமைகிறது. தமிழருக்கு எதிரான இனப்படு கொலையின் ஓர் இரத்த சாட்சியமாக இருக்கிறது.

துயர்தோய்ந்த, அவலம் நிரம்பிய கூட்டுநினைவுகள் ஒரு மக்கள் கூட்டத்தின் ஆழ்மனதில் காலம் காலமாக நிலைத்து நிற்கக் கூடியவை. வரலாற்றை மாற்றும் சக்தி கொண்டவை.
யூத மக்களின் தமக் கான தனி அரசு என்ற கனவு நாசி இனப்படு கொலையின்பின் தான் சாத்தியமாகியது.

பலஸ்தீன மக்களுக்கென எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் தனிஅரசும் இம் மக்கள் தாம் அனுபவித்து வரும் ஒடுக்குமுறைகளின் கூட்டுநினைவினை அரசியல் இயக்கமாகத் தொடர்ச்சியாகப் பேணிவருவதனால்தான் சாத்தியமாகப் போகிறது.

ஈழத் தமிழ் மக்களுக்கும் இவ்வுதாரணங்கள் மிகவும் பொருந்தப் போகின்றன.

தமிழீழத் தேசிய துக்க நாள் நாம் துயரத் தால் துவண்டு போகும் நாள் அல்ல. மாறாக நமது மக்கள் அடைந்த துயரத்தையும் துன் பத்தையும் அவலத்தையும் நமக்குள் உயிர்ப் பாய் உள்வாங்கி நாம் ஒரு தேசமாக பாது காப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு உறுதி பூணுவோம் என தெரிவிக கப்பட்டுள்ளது.

# மே 18 தமிழினத்தின் மீதான இன அழிப்பு நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னனி

(யாழ்ப்பாணம்)
பிரித்தானியர் களிடமிருந்து இலங்கை த்தீவின் ஆட்சியதிகாரத்தினை சிங்கள வர்கள் பெற்றுக் கொண்டனர்.

தீவை விட்டுப் பிரித்தானியர்கள் வெளியேறிய நாள் தொடக்கம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் வேலைத்திட்டங்களை சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்தியே வந்தனர். இந்த அழிப்பிலிருந்து தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ள அகிம்சை வழியில் தமிழ் அரசியல் தலைமைகள் மேற்கொண்ட ஜனநாயக வழிப் போராட்டங்கள் முழுமையாகத் தோல்வி யடைந்தது.

அதனால் தமிழ் மக்கள் தமது தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக கப்பட்டனர். அரசியல் விடுதலைக்கான தமிழ் மக்களது ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்திற்கு சித்தரித்தது. சர்வதேச நாடுகள் உண்மைகளை அறிந்தி ருந்தபோதும், தத்தம் பூகோள அரசியல் நலன்களுக்காக இலங்கையில் ஆட்சி யாளர்களை தமது கைகளுக்குள் போட்டுக் கொள்வதற்கு வசதியாக இலங்கையில் ஓர் அதிகார மையம் மட்டும் இருப்பதனையே விரும்பினர்.

அந்நோக்கத்தை அடைந்து கொள்வ தற்காக இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்பு யுத்தத்தை அமைதியாக விருந்து அனுமதித்தனர்.

பயங்கரவாதத்தை அழித்தல் என்ற போர்வையில் 21ம் நூற்றாண்டில் மனித குலத்திற்கு எதிரான சகல குற்றங்களையும் புரிந்தவாறு இந்த உலகின் கண்களின் முன்னால் இலங்கை அரசு மாபெரும் இனப் படுகொலையை வாகரையிலும், வன்னி மண்ணிலும் நிகழ்த்திக் கொண்டிருந்தது.

நடக்கப் போகும் பேரனர்த்தத்தை புரிந்து கொண்டு உலகம் முழுவதும் வாழ்ந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், தமிழக உறவுகளும், மொறீசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் தமது நாடுகளிலும் பல மாதங்களாக வன்னியில் அரங்கேறிக் கொண்டிருந்த இன அழிப்பை தடுத்து நிறுத்துமாறு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

யுத்த நிறுத்தம் கோரி பலர் தமக்குத் தாமே தீமூட்டித் தம்முயிரைத் தியாகம் செய்திருந்தனர்.

எனினும் தமது பூகோள அரசியல் நலன்களுக்காக வலிமைமிக்க நாடுகள் மௌனமாக இருந்தன. யுத்த சூனியப் பிரதேசங்களை அரசாங்கமே அறிவித்து அதற்குள் மக்களை வரவளைத்தது.

நம்பி வந்த மக்கள் மீது எறிகணைகளை வீசி மக்களை கொத்துக் கொத்தாக கொன்று குவித்தது. கற்பிணித் தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் என எந்த வேறுபாடுகளுமின்றி அப்பாவி மக்கள் கொன்றழிக்கப்பட்டனர்.

அனைத்தும் நடந்து முடிந்த பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் 40000 - 70000 வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ.நா அறிக்கையிட்டுள்ளது. ஆனாலும் 146000 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியாதுள்ளது.

தமிழ் மக்கள் மீது புரியப்பட்டது வெறுமனே மனித உரிமை மீறலோ, மனிதத்துவத்திற்கு எதிரான குற்றமோ, போர்க்குற்றமோ மட்டுமல்ல அது திட்டமிட்ட இனப்படு கொலையாகும். இதற்கு நீதி நிடைக்க வேண்டும். கூட்டுப்படுகொலை மூலம் எமது உறவுகளை கொன்றொழித்தது மட்டு மல்லாமல் தம்மால் கொன்றொழிக் கப்பட்டவர்களை நினைவு கூரவும் கூடாதென சிறீலங்கா அரசும் அதன் இராணுவ யந்திரமும் தடைவிதிக்கின்றன.

நினைவு கூரலை தடுப்பதன் மூலம் தமிழ் மக்கள் மீது தாம் புரிந்த இனவழிப்பை மூடிமறைத்துவிட முடியுமென அரசு எண்ணுகிறது. எம் உறவுகளை அழித்து எமது இனத்தை அடிமைப்படுத்திய நாளை சிறீலங்காவின் தேசிய வெற்றிவிழாவாகவும் கொண்டாடுகின்றது.

இன அழிப்பு ஒன்றின் மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறைபடிந்த நாளாகும். அந்நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக் கப்பட்டநாளாகும். அந்நாளை இனவழிப்பு நாளாகவே நாம் பிரகடனம் செய்கின்றோம்.

கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது. இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எம் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம்.

# சர்வதேச குருதிக் கொடையாளர்கள் நிகழ்வில் 1500 குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர் வரும் ஜீன் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச குருதிக் கொடை யாளர்கள் நிகழ்வில் 1500 குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட வுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை ,ரத்த வங்கிக்கு பொறுப்பாகவுள்ள குருதி மாற்று வைத்திய நிபுணர் கே.சி.டி.செனி வரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேசத்திற்கு உட்பட்ட குரு திக்கொடை நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் ஏற்பாட்டாளர்களுக்கிடையிலான கூட்டம் நேற்று (13.05.2014)யாழ்.போதனா வைத்திய சாலை ,ரத்த வங்கியில் ,டம்பெற்றது. ,ந்தகூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிய நாடுகளிலேயே முதன்முதலாக உலக குருதிக் கொடையாளர் தினத்தை கொண்டாடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இம்முறை இலங்கையைத் தெரிவு செய்துள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் டம்பெறவுள்ளது. இக் குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு கொடையாளர்களினை கௌரவிக்கும் வகையில் ஊர்தி வழியான கையெழுத்து வேட்டையும் இடம்பெறவுள்ளது.

இவ்வூர்தி எதிர்வரும் 4ஆம் திகதி பருத்தித் துறையில் இருந்து புறப்பட்டு [illegible] பளை ஊடாக யாழ். வீரசிங்கம் மண்டபத் தினை வந்தடையும். இதன் பின் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்படவுள் ளனர்.
இதனைத் தொடர்ந்து ஊர்தி வவுனியா விற்குச் சென்று அநுராதபுரம் வழியாக கொழும்பைச் சென்றடையும். இவ்வாறு நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் கையெழுத்து வேட்டை இடம்பெறும்.
இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சுகாதார அமைச்சர் பி. சத்தியலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன் தகுதியானவர், ஆனால் பொருத்தமானவரல்ல

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காக எதிர்க் கட்சியின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான விவாதம் வலுப்பெற்று வருகிறது. பொது வேட்பாளராக வட மாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரனை நிறுத்த வேண்டும் என்றதோர் கருத்தும் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் விமர்சகர் குசல் பெரேராவே முதன் முதலில் இக் கருத்தை முன்வைத்தார். அதனை அடுத்து கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான மனோ கணேசனும் அக் கருத்தை தெரிவித்திருந்தனர். அக் கருத்து பொது வேட்பாளர் தொடர்பான விவாதத்திற்கு புதியதோர் பரிமாணத்தை கொடுத்துள்ளது.


ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி உட்பட பல எதிர்க் கட்சிகள் கூறி வந்த போதிலும் அம் முயற்சி எந்த அளவிற்கு வெற்றிபெறும் என்பது சந்தேகமே. பொது வேட்பாளர் தமது கட்சியைச் சேர்ந்தவர் அல்லது தம்மை சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று எதிரணியிலுள்ள உள்ள பல கட்சிகள் நினைப்பதே அதற்குக் காரணமாகும்.
தமது கட்சிகள் தனித் தனியே போட்டியிட்டு மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாது என எதிர்க் கட்சிகள் நினைப்பதனாலேயே அக் கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரைப் பற்றி சிந்திக்கின்றன. அவ்வாறாயின் அப் பொது வேட்பாளர் எதிர்க் கட்சியில் சகல கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். தனி ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தால் நோக்கம் நிறைவேறாது.

அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பதிலாக மற்றொருவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்வதிலும் அர்த்தம் இல்லை. ஏனெனில் எவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் அந்தப் பதவிக்கான அதிகாரங்களை பாவிக்க மாட்டார் என்பதற்கு உத்தரவாதமில்லை. ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவைத் தவிர வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரங்களை பாவிக்கா திருந்ததில்லை.
விஜேதுங்க தற்செயலாக ஜனாதி பதியானவர். தொடர்ந்தும் அது போன்ற வர்கள் பதவிக்கு வருவதில்லை. எனவே பொது வேட்பாளர் பதவிக்கு வந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ரத்துச் செய்தால் மட்டுமே நோக்கம் நிறைவேறும். பல மாதங்களுக்கு முன்னர் பொது வேட்பாளர் வேண்டும் என்ற கோஷத்தை ஆரம்பித்து வைத்த கோட்டே நாக விகாரை விகாராதிபதி மாதுளுவாவே சோபித்த தேரரும் அதனை தான் வலியுறுத்தி வருகிறார்.

அவ்வாறாயின் பொது வேட்பாளரைப் பற்றிப் பேசும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த கட்சிகள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய விரும்பும் கட்சிகளாக இருக்க வேண்டும். ஆனால் உண்மை என்னவென்றால் மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர்ந்த நாட்டில் எந்தவொரு கட்சிக்கும் இது தொடர்பாக நிலையான கொள்கையொன்று இருந்ததில்லை. வரலாற்றை சற்று எட்டிப் பார்த்தால் அது புலனாகும்.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஐ.தே.க. அரசாங்கம் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட அப்போதைய சகல எதிர்க் கட்சிகளும் அதனை எதிர்த்தன. முன்னாள் நிதி அமைச்சரும் லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவருமாக இருந்த கலாநிதி என்.எம். பெரேரா அக் காலத்திலேயே இந்த ஆட்சி முறையின் விளைவுகளைப் பற்றி புத்தகம் ஒன்றையும் எழுதியிருந்தார்.

ஆனால் ஐ.தே.க. தலைவர்கள் அந்த எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது தமக்கு




நாடாளுமன்றத்தில் அப்போதிருந்த ஆறில் ஐந்து பலத்தை பாவித்து 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொண் டனர். அதன் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிர்க் கட்சிகள் கூறியவாறே குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் கேள்விக்கு உட்படுத்தவாவது முடியாத நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் உருவாகினார்.

1994ஆம் ஆண்டு தாம் பதவியில் இருந்து தூக்கியெறியப்படும் வரை ஐ.தே.க. இந்த ஆட்சி முறையின் விளைவுளை பகிரங் கமாக ஏற்றுக் கொள்ளவில்லை. 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணியொன்று பதவிக்கு வந்தது. தாம் பதவிக்கு வந்தால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக அக் கூட்டணியின் சார்பில் பிரதமர் பதவியை நாடி நின்ற சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால் அவர் பிரதமாக பதவியேற்ற போது அவருக்கு அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற பலம் கிடைக்கவில்லை. எனவே அதற்கு தேவையான வாக்குகளை தாம் வழங்கு வதாக எதிர்க் கட்சித் தலை வராகவிருந்த காமினி திஸாநாயக்க கூறினார். ஆனால் அந்த ஒத்துழைப்பை பெற்று நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்வரவில்லை.ஸ

அதே ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகாவும் ஐ.தே.க. சார்பில் காமிணி திஸாநாயக்கவும் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் நிஹால் கலப்பத்தியும் போட்டியிட்டனர். மற்ற இருவரில் ஒருவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக எழுத்து மூலம் வாக்குறுதியளித்தால் தாம் போட்டியில் இருந்து வாபஸ் பெற்று அந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக கலப்பத்தி கூறினார்.

1994ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தாம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக சந்திரிகா அம்மையார் மக்கள் விடுதலை முன்னணிக்கு எழுத்து மூலம் வாக்குறுதியளித்தார். கலப்பத்தி தேர்தலில் இருந்து வாபஸ் பெற்றார். ஆனால் பதவிக்கு வந்ததன் பின்னர் சந்திரிகாவின் அரசாங்கம் வாக்குறுதியை நிறை வேற்றுவதைப் பற்றி சிந்திக்கவே இல்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு சந்திரிகாவே நியமித்த நாளுக்கு இரண்டாண்டுகள் பூர்த்தியானதன் பின்னர் 1997 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி ஐ.தே.க. கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. சந்திரிகாவின் அரசாங்கம் பொலிஸாரை ஏவி ஆர்ப்பாட்டக்காரர்களை மட்டுமன்றி அங்கு சென்றிருந்த ஊடகவியலாளர்களையும் அடித்து விரட்டியது.

உண்மையிலேயே ஐ.தே.க.வின் இந்த ஆர்ப்பாட்டமும் ஒரு வித அரசியல் திருகுதாளமேயன்றி வேறொன்றுமல்ல. அக்காலத்திலும் ஐ.தே.க. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யும் நோக்கத்தில் இருக்கவில்லை, தாம் செய்ய நினைக்காத ஒன்றை செய்யுமாறே அக் கட்சி அப்போது அரசாங்கத்திற்கு வற்புறுத்தியது. ஆனால் அரசாங்கத்தின் நேர்மையற்ற தன்மை அதனால் மேலும் அம்பலமாகியது உண்மை தான்.

1994ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்து செய்ய தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக காமினி திஸாநாயக்க கூறியதும் அரசாங்கத்தின் நேர்மையற்ற தன்மையை அம்பலப் படுத்துவதற்காகவே அன்றி உண்மையி லேயே நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்து கொள்வதற்காக அல்ல.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா தாமே நாடாளுமன்றத்திற்குச் சென்று புதிய அரசியலமைப்பு திட்டமொன்றை சமர்ப் பித்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறையற்ற ஆட்சி முறையே அதன் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அதற்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கவில்லை. அதேவேளை அந்த அரசியலமைப்பின் பிரகாரமும் சந்திரிகா தமது இரண்டாவது பதவிக் காலம் முடியும் வரை நிறைவேற்று ஜனாதிபதியாகவே இருக்க வழி சமைக்கப்பட்டிருந்தது.

2005ஆம் ஆண்டு புலிகளின் தேர்தல் பகிஷ்ப்பின் பயனாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹிந்த ராஜபக்ஷஅந்தத் தேர்தலின் போது முன்வைத்த மஹிந்த சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்த முக்கிய வாக்குறுதிகளில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதும் ஒன்றாகும். ஆனால் அவரும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதைப் பற்றி சிந்திக்கவேனும் இல்லை. அதற்காக 2004 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு நாடாளு மன்ற பலம் இருக்கவும் இல்லை.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போதே அக் கூட்டணிக்கு அந்த பலம் கிடைத்தது. ஆனால் ஐ.ம.சு.கூ அந்த பலத்தை பாவித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்குப் பதிலாக நிறைவேற்று ஜனாதிபதிக்கு இருந்த ஒரே கட்டுப்பாடான 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்து ஒருவர் நிறைவேற்று ஜனாதிபதியாக' இரண்டு முறை மட்டுமே இருக்க முடியும் என்ற நிலையை மாற்றி எத்தனை முறையும் இருக்கலாம் என்று கூறும் 18ஆவது அரசியலமப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டது.

தமிழ் கட்சிகளும் ஆரம்ப காலத்தில் காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை எதிர்க்கவில்லை ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அந்த நோக்கத்தை முன்வைத்து போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரித்தது.

எனவே பொது வேட்பாளரை தேடும் எந்தவொரு கட்சியும் நாளை பதவிக்கு வந்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அந்த நோக்கம் இல்லாவிட்டால் எதிர்க் கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை முன்வைப்பதில் அர்த்தமும் இல்லை.

ஆனால் முதலமைச்சர் சி.வி.விக்னே ஸ்வரன் நீதியரசராக இருந்த காலத்தில் நடந்து கொண்ட விதத்தை பார்த்தால் அவர் இந்த விடயத்தில் வித்தியாசமாக நடந்து கொள்ளலாம். அதாவது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக வாக்குறு தியளித்துவிட்டு அவர் உண்மையிலேயே ஜனாதிபதியானால் அவர் தமது வாக்கு றுதியை நிறைவேற்ற முயற்சி செய்யலாம். அதற்கான நாடாளுமன்ற பலத்தைப் பெற்றுக் கொள்வது தான் பிரதான பிரச்சினையாக அமையும்.

தமிழ் இனவாத கட்சியொன்றில் சேராமல் இருந்திருந்தால் விக்னேஸ்வரன் நேர்மை யான நிர்வாகி என்பதற்கு உதாரணப் புருஷராக திகழ்வார் என சிங்கள சட்டத்தரணி எஸ்.எல். குணசேகரவே டெய்லி மிரர் பத்திரிகைக்கு எழுதியிருந்த கட்டுரையொன்றில் கூறியிருந்தார். எனவே விக்னேஸ்வரனின் தகுதியில் எவ்வித குறையும் இல்லை.

விக்னேஸ்வரன் பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் எதிர்க் கட்சிகள் அதற்கான காரணத்தை விளக்க வேண்டும் என சுமந்திரனும் மனோ கணேசனும் எதிர்க் கட்சிகளிடம் கூறியிருக்கின்றனர்.

ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் அதற்கான காரணத்தை அக் கட்சிகள் கூறித்தானே ஆக வேண்டும். அவ்வாறிருக்க அதனை ஏன் அழுத்திக் கூற வேண்டும்? அதாவது அந்தக் காரணம் அவ்விருவருக்கும் தெரியும் என்பதே.

உண்மையிலேயே ஏனைய எதிர்க் கட்சிகள் விக்னேஸ்வரனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். காரணம் அவர் ஜனாதிபதியாவதற்கு தகுதியானவரல்ல என்பதல்ல. நாட்டில் ஜனாதிபதி பதவிக்கு தகுதியான ஒரு சிலர் இருந்தால் அவர்களில் விக்னேஸ்வரன் முன்னணியில் இருப்பார்.

ஆனால் அவர் தமிழராயிற்றே. எதிர்க் கட்சிகள் இனவாதக் கண் கொண்டு அவரை நோக்காவிட்டாலும் அவரை போட்டியில் நிறுத்தி வெற்றி பெற முடியாது. பெரும்பான்மையான சிங்கள மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள். அது எதிர்க் கட்சிகளின் தலைவர்களின் இப்போதைய தவறல்ல.

விக்னேஸ்வரனை போட்டியில் நிறுத்தினால் சிங்கள இனவாதத்தை அம்பலப்படு த்தவாம்.ஆனால் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாது. தற்போதைய அரசாங்கத்தின் போக்கை நிறுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்பது தான் எதிர்க் கட்சிகளின் நோக்கமாக இருந்தால் அதனை ஒரு புறம் வைத்துவிட்டு சிங்கள இனவாதத்தை அம்பலப்படுத்துவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.



# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் இடம்பெற்ற தாதியர் தின நிகழ்வு



(மட்டக்களப்பு)
சர்வதேச தாதியர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் தாதியர் தின நிகழ்வு திங்கட் கிழமை (12) இடம்பெற்றது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வைத்தியசாலையில் பணிபுரிகின்ற வைத்தியர்கள், தாதியர்கள், மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் அவர்கள் தாதி உத்தியோகத்தர் களுக்கு ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச முதியோர் சங்க காரியாலயம் திறப்பு



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவடத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் பிரதேச முதியோர் சம்மேளன காரியாலய திறப்பு விழா நேற்று திங்கட் கிழமை (12) களுவாஞ்சிகுடி நந்தவனம் முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

பிரதேச முதியோர் சம்மேளனத் தலைவர் அ.சிவநேசராசா தலைமையில் அவர்களது தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் கலாநிதி மூ. கோபால ரெத்தினம் மட்டக்களப்பு, உதவி மாவட்ட செயலாளர் சோ. ரங்கநாதன் களுவாஞ் சிகுடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் மற்றும் முதியோர் சங்க உறுப்பினர்கள் என பல. கலந்து கொண்டனர்.

இதன் போது காகிதாதிகள் மற்றும் முதியோர் சங்களுக்கான கொடுப்பனவுகள் என்பன பிரதேச முதியோர் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

# சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகள்



(மட்டக்களப்பு)
சர்வதேச செஞ்சிலுவை தினத்தினை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் நேற்று முன்தினம் திங்கட் கிழமை (12) பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேசத்தின்தின் மீள் குடியேற்றக் கிராமமான இலுப்படிச்சேனை மற்றும் பாலர் சேனை அகிய கிராமங்களில் பாவனைற்று பழுதடைந்த நிலையில் இருந்த 4 குழாய் கிணறுகளை திருத்தி அம்மக்களிடம் கையளிக்கப்பட்டன.

அதுபோன்று மரப்பாலம் எனும் கிராமத்தில் சேமக்காலையில் மாபெரும் சிரமதான நிகழ்வொன்றும் நடைபெற்ற அதேவேளை அந்த கிராமத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு அவர்களது கால்நடைகளைக் கட்டி பராமரிக்கக் கூடிய நைலோன் கயிறுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கதின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொண்டர் கிளை நிறைவேற்று உத்தியோகஸ்தர் வி.பிறேகுமார், தொண்டர் இணைப்பாளர் ச.கணேசலிஙகம், முதலுதவி இணைப்பாரள் சீ.கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நாக்கு குழாய் கிணறுகள் திருத்திக் கொடுக்கப் பட்மையினால் கால் நடையாக நடந்து 3, 4, மைல் தொலைவில் குடிநீருக்காகச் செல்லும் அப்பிரதேச மக்களின் தேவை பூர்தியாக்கப் பட்டுள்ளதாகவும் இதனால் சுமார் 100 குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனவும், கால்நடைகளைக் கொண்டு விவசாயக் கிராமமாகக் காணப்படும் மரப்பாலம் கிராம மக்களை ஒன்றிணைத்து அவர்களது சேமக்காலை துப்பரவு செய்யப்பட்டுள்ளதுடன் அம்மக்கள் அவர்களது கால்நடைகளை கட்டி பாதுகாப்தற்கு கயிறுகளும் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளைத் தலைவர் த.வசந்தராசா இவ்விடயம் பற்றி தெரிவித்தார்.

# கிழக்குப் பல்கலைக் கழகத்தின் குழப்பத்திற்கு பல்கலைக்கழக உபவேந்தரே காரணம்

(மட்டக்களப்பு)
இன்று கிழக்கு பல்கலைக் கழகத்தின் குழப்பகரமான சூழ் நிலைகளுக்கு பல் கலைக் கழக உபவேந்தரின் ஜனநாயகம் பேணப்படாத தான்தோன்றி தனமான செயற்பாடுகளே காரணமாகு மாகும் என மீழ் குடியேற்ற பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தேற்றத்தீவு உதயம் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா தேற்றத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் அதன் தலைவர் இரா. கதிரவேற்ப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்குகையில் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் சமூதாயம் கல்வில் பின்னோக்கி செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக் கழகத்தினை எடுத்துக் கொண்டால் இங்கு ஏகப்பட்ட பிரச்சினை இதற்கு காரணம் உப வேந்தர் எடுத்த எடுப்பிலே தான்தேன்றித்தனமாக மாணவர்கள் மத்தியில் பழிவாங்கல் களை மேற்கொண்டு வருகின்றார் அங்கிருக்கின்ற மாணவர்களுக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் விரிவுரையாளர்களுக்குப் பிரச்சினைகள் கல்விசாரா ஊளியர் களுக்கு ஏகப்பட்ட பிரச்சினை காரணமாக தற்போது கிழக்கு பல்கலைக் கழகம் தாண்டவமாடிக்கு கொண்டு இருக்கின்றது.

எமது சசோதர இனத்தின் பல்கலைக் கழகமான தென் கிழக்கு பல்கலைக் கழகம் அண்மையில் திறக்கப்பட்டது அப்பல்கலைக் கழகம் பொறியியல் பீடத்தினையும் பெற்று சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கின்றது. எமது தமிழ் சமூதாயம் எதை ஒப்பிட்டு பார்த்தாலும் கீழ் நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது. இன்று எமது கிழக்கு பல்கலைக் கழகம் மாண வருக்கும் உப வேந்தருக்குமான பிரச்சின்ன காரணமாக பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது. ஒரு உப வேந்தர் சர்வாதிகாரமாக செயற்பட்டு ஜனநாயகம் பேணப்படாமல் மாணவர்களை வெளியேற்றி இருக்கின்றனர். இப்படியிருந்தால் தமிழ் சமூதாயம் எப்படி முன்னே வாய்ப்பு உண்டு.

மட்டக்களப்பு தமிழ் சமூதாயம் பொருளாதாரம் கல்வி விளையாட்டு அரசியலாகிய போன்ற துறைகளிலே தற்போது பின்னடைவை எதிர் நோக்கியுள்ளனர் என்பதுடன் ஏனைய சமூகத்துடன் போட்டி போட முடியாத நிலையில் நின்று கொண்டிருக்கின்றனர். கட்டிகாத்து வந்த கல்வி பொருளாதாரம் அனைத்தும் மெதுமெதுவாக எமது மக்களைவிட்டு நலிவடைந்து செல்லக்கூடிய ஒரு துர்பாக்கிய நிலையில் எமது தமிழ் சமூகம் நின்று கொண்டிருக்கின்றது.

இவற்றினை உருவாக்க வேண்டு மென்று நினைத்தாலும் அதில் அக்கறையில்லாத நிலை காணப்படுகின்றது. இவை அனைத்திற்கும் காரணம் தமிழ் சமூகம் சிறந்த அரசில் தலமையினை கை நழுவ விட்டிருப்பதுதான் காரணம். ஆனால் இதனை ஏனைய சமூகம் சதகமாக பயன்படுத்தி முன்னேறிக் கொண்டு செல்கின்ற நிலையினை நாங்கள் மட்டக்களப்பிலே காணக்கூடியதாக இருக்கின்றது.

விளையாட்டுக்கள் மனிதனை உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் முன்னேற்றுகின்ற ஒரு துறையாகவும் சந்தோசப் படுத்துகின்ற ஒரு துறையாகவும் காணப்படுகின்றது. இருந்தும் ஒவ்வொரு கிராமத்துக்கு கிராமம் மக்களின் தேவைகள் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றது. இதனை அறிந்துதான் எமது பிரதி அமைச்சர் முரளிதரன் அவர்கள் தன்னால் முடிந்தளவு சேவையினை ஆற்றிவருகின்றார்.

இதனை உணர்ந்து எமது தமிழ் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன் தான் அரசாங்கத்தின் பக்கம் அமைச்சராகி இருக்கின்றார். இதனூடாக எமது மக்களுக்கு இயன்றளவு சேவை செய்து வருகின்றோம் எமது மக்களுக்குள் இருக்கும் பிரச்சினை இனங்கண்டு செய்கின்ற போதும் அது காணாது காணாது என கூறி வருகின்றனர். இதனை கூறுகின்றவர்கள் சிந்திக்க வேண்டும் மட்டக்களப்பு மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். இதனை இலகுவில் ஒருவரால் அபிவிருத்தியடைய வைக்க முடியாது. எனத் தெரிவித்த அவர்.

கிடைக்கின்ற நிதியினை துறைநீலாவணை தொடக்கம் வெருகல்வரை பங்கிட வேண்டியுள்ளது இதனால்தான் இவர்கள் கொண்டு வந்த நிதி போதாது என்று நினைக்கின்றனர்.

ஏனைய அமைச் சர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் செலவு செய்வதனால் அது அபிவிருத்தி பிரதேச மாக காட்சியளிக்கின்றது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

# கல்முனை மாநகரசபை உறுப்பினர் அட்டகாசம் ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு



(மட்டக்களப்பு)
கல்முனை மாநகரசபையின் உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளருமான வெஸ்ரர் றியாஸின் அடாவடித்தனத்தினால் இன்று கல்முனை மாநகரசபையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக அங்கு பணிபுரியும் ஊழியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இது குறித்து அவர்கள் மேலும் கருத்துக்கூறுகையில்,

நேற்று முன்தினம் கல்முனை மாகரசைக்குள் புகுந்த றியாஸ் அங்கு வேலை செய்து கொண்டிருந்த கணபதிப்பிள்ளை புவநேந்திரன் என்பவருக்கு அடித்து கண்ணாடிகளையும் உடைத்த சம்பவத்தின் எதிரொலியே இன்றைய இந்த பணிப்பகிஸ்கரிப்பாகும்.

இவரது செயற்பாடுகள் காரணமா இங்கு தொழில்புரியும் அனைத்து ஊழியர்களும் தங்களது வேலைகளை ஒழுங்காக செய்ய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாகி உள்ளதாகவும் இவர் தனக்கு விருப்பமான நேரத்தில் மது போதையில் இங்கு உட்பிரவேசித்து தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பெண்கள் மத்தியிலும் கூறி அவர்களது கடமைகளுக்கும் குந்தகம் விளைவித்து வருகின்றார்.

தான் இந்தப்பிரதேசத்தின் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் என்ற அதிகாரத்தின் மூலம் இங்குள்ளவர்களை அடக்கியாள நினைப்பதோடு, தனக்கு சாதகமானவர்களை அனைவரும் மதிக்கவேண்டம். எனவும் ஏனைய உத்தியோகத்தர்களை மிரட்டியும் வருகின்றார்.

இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என வினவியபோது, இதுவரை எந்தவித முறைப்பாடும் செய்யவில்லை எனவும் இதனை இனரீதியாக பெரிது படுத்தாமல் சுமுகமாக தீர்வினை பெறுவோம் என கொமிசனர் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காக நடவடிக்கை களை உரியவர்கள் இன, மதம் பாராமல் எடுக்கவேண்டும் எனவும் இச்செயற்பாடு இனிமேலும் நடைபெறாமல் இவரது அடாவடித்தனத்தினை தடுப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் எனவும் இதுபோன்ற இவரது அடாவடித்தனங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது எனவும் கூறினார்.

# பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக முறைப்பாடு

(மட்டக்களப்பு)
களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இம்முறை ஐந்தம் ஆண்டு புலமைப் பரிட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்த வகுப்பு ஆசிரியரை, தனது விடுவிப்பு இன்றி பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் செய்துள்ளதாக மட்.களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபர் ரி.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, இப்பாடசாலை பட்டிருப்பு கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப் பரிட்சையில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்து வருகின்றது.

இந்நிலையில் இவ் வகுப்பாசிரியர் திருமதி. எஸ்.கந்தசாமி அவர் களை 8 வருடங்கள் சேவை முடியும் முன் அதிபரின் முறையான விடுவிப்பின்றி, வலயக்கல்விப் பணிப்பாளர் பதில் ஆசிரியர் இன்றி மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு விடுவித்துள்ளார் என மாகாண கல்விப் பணிப்பாளரின் கடித்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஓர் ஆசிரியர் இடமாற்றம் வருட இறுதியில் நடைபெற வேண்டும் அதுவும் 8 வருட முடிவிலேயே இடமாற்றம் செய்யலாம் அல்லது பதில் ஆசிரியருடன் விடுவிக்கலாம். ஆசிரியர் பற்றாக்குறை காணபபடும் போது வருட இடையில் இடமாற்றம் செய்வது அதுவும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார் செய்யும் ஆசிரியரை இடமாற்றம் செய்வது கல்விக்குறிக் கோளுக்கு இழுக்கு, இடையூறு ஏற்படுத்தும் செயலாகும். மேலும் மாணவர்களை நட்டாற்றில் விடும் செயலாகும்.

ஆசிரியர் மாணவர்களுக்காகத்தான் நியமிக் கப்படுகின்றார்கள் என்ற நியதியை மாற்றியுள்ளார் இவ்வலயக் கல்விப் பணிப்பாளர். இது இப்பாடசாலையை தரம் குறைப்பதற்கு எடுக்கப்படும் ஓர் திட்டமிட்ட சதியாகும். என கருத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாசிரியருக்குப் பொருத்தான ஓர் பதில் ஆசிரியர் நியமிக்கப்படாவிட்டால் இதில ஏற்படும் பிரச்சனைகளுக்கும், மேலும் மாணவர் அடைவு மட்டக் குறைவு, குறைந்த மட்ட பரீட்சைப் பெறுபேறு என்பவற்றிற்கு வலயக் கல்விப் பணிப்பாளரும், மாகாணக் கல்விப் பணிப்பாளருமே, பொறுப்பாளியாவார்கள்.

இப்பாடசாலையிலிருந்து மூன்று ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், இடமாற்றப்பட்டுள்ளனர். ஆனால் அதுவரை ஒரு அசிரியர் மட்டுமே பதிலீடாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடமாற்றப்பட்ட சங்கீத ஆசிரியருக் குப் பதிலாக எவ்வித ஆசிரியரும் நியமிக் கப்படாததால் இதுவரை அம்மாணவர்கள் அனாதைகளாக்கப்பட்டுள்ளார்கள். எவ்விதத்திலும் சங்கீத ஆசிரியர் ஒருவர் தற்காலிகமேனும் நியமிக்கப்படவில்லை என்பதனையும், இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிற்கே வழிகாட்டியாக திகழும் இந்தியா தேர்தலை முடிவுக்கான ஒபாமாவின் வாழ்த்து



உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா தனது மிகப் பெரிய தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதற்காக அமெரிக்க அதிபர் ஒபாமா வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்திய மக்களவைத் தேர்தல் குறித்து அமெரிக்க அதிபர் வெளியிட்டுள்ள கருத்தில், தேசிய தேர்தலை வெற் றிகரமாக நடத்தி முடித்துள்ள இந்திய மக்களுக்கு எனது வாழ்த்துக்கள், வரலாற்றில் மிகப் பெரிய ஜனநாயக தேர்தலை நடத்தியதன் மூலம் உலக நாடுகளுக்கு ஜனநாயக வழிகாட்டியாக இந்தியா திகழ்கிறது.

தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு அமைய உள்ள இந்தியாவின் புதிய அரசு நிர்வாகத்துடன் வருங்காலத்தில் நெருக்கமான உறவுடன் ஒத்துழைப்பு தந்து பணியாற்ற விரும்புகிறோம். அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே கடந்த 20 ஆண்டுகளில் வலுவான நட்புறவு உருவாகி உள்ளது. இந்த நட்புறவின் காரணமாக அமெரிக்காவில் உள்ள மக்கள் பாதுகாப்புடன் வளமாக உள்ளனர்.

மேலும், இந்த நட்புறவு இனிவரும் காலங்களில் மேலும் பலமானதாக வளர வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என் தெரிவித்துள்ளார்.

# பிரான்சில் மின்சாரத்தில் பறக்கும் விமானம்

(பாரீஸ்)
பிரான்ஸ் நாட்டில் தவுலோசில் உள்ள ஏர்பஸ் நிறுவனம் மின்சாரத்தால் பறக்க கூடிய ஒரு குட்டி விமானத்தை தயாரித்துள்ளது. அதற்கு இபேன் என பெயரிடப்பட்டுள்ளது.

இது மொத்தமே 19 அடி நீளமே உள்ளது. அதில் 2 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். பெட்ரோல் டேங்கிற்கு பதில் இதில் சக்தி வாய்ந்த பேட்டரிகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த பேட்டரியில் சார்ஜ் செய்து மின்சாரம் சேமிக்கப்படுகிறது. அதன் உதவியால் இந்த விமானம் பறக்கிறது. அதிநவீன தொழில்நுட்பத்தினால் ஆன இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் தென் மேற்கு பிரான்சில் உள்ள போர்டியாஸ் விமான நிலையம் அருகே நடந்தது.

அப்போது இந்த விமானம் சுமார் ஒரு மணி நேரம் பறந்து சாதனை படைத்தது. கடந்த மாதம் நடந்த சோதனை ஓட்டத்தில் 10 நிமிட நேரம் மட்டுமே பறந்தது. தற்போது நடந்த சோதனை ஓட்டம் மூலம் பெரிய அளவில் ஆன விமானத்தை தயாரிக்க இந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

# கிழக்கு உக்ரைன் சுதந்திரம் அடைந்தது கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு

(டோனட்ஸ்க்)
உக்ரைனின் கிரிமியா தன்னாட்சி பிராந்தியத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு அந்த பகுதி ரஷ்யாவுடன் இணைந்தது. இதே போன்று உக்ரைனின் கிழக்குப்பகுதியிலும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் அரசு அலுவலகங்களை கைப்பற்றி, தனி நாடு கோரிக்கைக்கான போராட்டத்தை தொடங்கினர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் எதிர்ப்பு மற்றும் ராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் கிழக்குப்பகுதியில் உள்ள டோனட்ஸ்க் மற்றும் லூகான்ஸ்க் பிராந்தியங்களில் ஞாயிற்றுக்கிழமை பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பின்னர் இந்த பிராந்தியங்கள் சுதந்திரம் பெற்றதாக இன்று கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். இந்த வாக்கெடுப்பு சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என்று உக்ரைன் அரசும் மேற்கத்திய நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

இது தொடர்பாக பிரிவினைவாதிகளுடன் பேச்சுவாத்தை நடத்தும்படி உக்ரைன் நாட்டின் இடைக்கால அரசிடம் ரஷ்யா ஏற்கனவே கேட்டுக்கொண்டது. ஆனால், இந்த இணைப்பு கோரிக்கை தொடர்பாக உடனடி பதில் எதுவும் வரவில்லை. பொது வாக்கெடுப்பு முடிவை தள்ளி வைக்க வேண்டும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் விடுத்த வேண்டுகோளையும் போராட்டக்காரர்கள் ஏற்கவில்லை.

மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் மீது அவர்கள் சொந்த கருத்தை வெளிப்படுத்தியிருப்பதையே இந்த வாக்கெடுப்பு காட்டுகிறது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே உக்ரைனில் வருகிற 25ந் தேதி அதிபர் தேர்தல் நடைபெறுகிறது. அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், கிழக்கு உக்ரைனில் பெரும்பாலான வாக்கு சாவடிகளை ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

உக்ரைன் அதிபர் தேர்தலை சீர்குலைக்கும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டால் அந்த நாட்டு பொருளாதாரத்தின் மொத்த துறைகளையும் குறிவைத்து நடவடிக்கை எடுப்போம் என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. அமைதிப்படையில் முதன்முறையாக பெண் கமாண்டர் நியமனம்



(நியூயார்க்)
ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலாளர் பான்-கி-மூன் சைப்ரஸ் பகுதியில் நடைபெறும் அமைதி பாதுகாப்புப் பணிக்கு முதல் பெண் தளபதியை நியமிப்பதாக நேற்று தகவல் வெளியிட்டார்.

நார்வேயைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கிறிஸ்டின் லூண்ட் வரும் ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி முதல் சீனாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாவோ லியுவிடமிருந்து இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் சைப்ரஸ் பிரிவுக்கும், கிரீசிற்கும் இடையில் உள்ள 112 மைல் நிலப்பரப்பும், 900 ராணுவத்துருப்புகள் அடங்கிய காவல்துறையும் இவரது கண்காணிப்பின் கீழ் செயல்படும். கடந்த 1974ஆம் ஆண்டு கிரீசில் நடந்த ராணுவப் புரட்சியின் விளைவாக சைப்ரஸ் நாட்டை துருக்கி தாக்கியது. இதனால் பாதிப்படைந்த சைப்ரஸ் பகுதிக்கு இந்த அமைப்பு நிதி மற்றும் அரசியல் ஆதரவு வழங்கி வருகின்றது.

இந்தப் பொறுப்பினை ஏற்பதாக அறிவித்த பின்னர் கிறிஸ்டின் லூண்ட் நியூயார்க்கில் உள்ள ஐ.நா அமைப்பின் தலைமை அலுவலகத்தில் ஐ.நா பொதுச் செயலாளர் பான்-கி-மூனையும், அமைதிப் பணிக்கான உள்துறை பொதுச் செயலரான ஹெர்வ் லாட்சசையும் சந்தித்தார். ராணுவ கட்டளை மற்றும் ஊழியர்களுடனான பணி நிர்வாகத்தில் லூண்ட் 34 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டவர் என்று பான்-கி-மூன் தனது அறிக்கையில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### குடும்பத்தையே தீக்கிரையாக்கிய மொபைல் சார்ஜர்

(இங்கிலாந்து)
இங்கிலாந்தில் கைப்பேசி சார்ஜர் தீ பிடித்து எரிந்ததில் ஒரு குடும்பமே தீக்கிரையாகியுள்ளது.இங்கிலாந்தின் யார்க்ஷயர் நகரில் உள்ள வீட்டில் கைப்பேசி சார்ஜர் தீ பிடித்து எரிந்துள்ளது. இதில், 9 வார குழந்தை உட்பட 5 பேர் உயரிழந்தனர். அத்யான் பர்வஸ் கயானி (9), அமான் பர்வஸ் கயானி (7), மற்றும் இவர்களின் சகோதரியான 9வார குழந்தை மினாயில் ஆகியோர் இந்த தீவிபத்தில் மரணமடைந்தனர். மேலும் இவர்களின் அத்தை அனும் பர்வஸ் (20) மற்றும் பாட்டி சபீனா பேகம் (53) ஆகியோரும் மரண மடைந்தனர். பேகம் முதலில் தீயிலிருந்து தப்பித்த தாகவும், பின்னர் குழந்தைகளை காப்பற்ற சென்று அவரும் உயிரிழந்தார் என தெரியவந்துள்ளது.

விசாரணையில், கைப்பேசி சார்ஜரில் தீப்பொறி ஏற்பட்டு பின்னர் பெரிய தீயாக பற்றி வீடு முழுவதும் எரிந்துள்ளது. 9 வார குழந்தை, இரு சிறுவர்கள், ஒரு இளைஞர், ஒரு முதியவர் என மூன்று தலைமுறைகள் இந்த தீவிபத்தில் அழிந்துள்ளது என்பது குறிப்பிடதக்கது.

# நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவிகளை விடுவிக்க தீவிரவாதிகள் நிபந்தனை

(அபுஜா)
நைஜீரியாவில் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில் கடந்த மாதம் (ஏப்ரல்) 14ந்தேதி பள்ளி விடுதியில் இருந்து 276 மாணவிகளை போகோ ஹாரம் தீவிரவாதிகள் கடத்தி சென்று மறைவிடத்தில் சிறை வைத்துள்ளனர்.

அவர்களை "செக்ஸ்" அடிமைகளாக விற்க போவதாக மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நைஜீரிய ராணுவத்தால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அதை தொடர்ந்து அவர்களை மீட்க அமெரிக்கா ராணுவத்தை அனுப்பியுள்ளது. இந்த நிலையில் நேற்று "போகோ ஹாரம்" தீவிரவாதிகள் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளனர். அதில், கடத்தப்பட்ட மாணவிகளில் 130 பேர் மட்டும் அதில் தோன்றினர்.

அதில், அவர்கள் கிறிஸ்தவ மதத்தில் இருந்து இஸ்லாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர். அவர்கள் உடல் முழுவதும் மறைத்த நிலையில் நீண்ட "பர்தா" போன்ற உடை அணிந்திருந்தனர்.

வீடியோவில் தீவிரவாதிகளின் தலைவர் அபுபக்கர் ஷெகாவு தோன்றி பேசினார். அதில், "கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள எங்களது இயக்கத்தை சேர்ந்த தோழர்களை (தீவிரவாதிகளை) உடனடியாக விடுவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் மாணவிகளை விடுதலை செய்ய முடியாது" என திட்டவட்டமாக கூறினார். ஆனால், இதற்கு நைஜீரியா அரசு மறுத்து விட்டது. தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்க முடியாது என உள்துறை மந்திரி அப்பா மோரோ தெரிவித்துள்ளார்.

இதனால், நைஜீரியாவில் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

# வடகொரிய மக்களின் அவலநிலை அம்பலம்!



வடகொரிய மக்களின் வாழ்க்கை நிலையை எரிக் லாப்ரிக் (நுசுஐஊ டுயுகுகுசுபுருநு) என்ற புகைப்படக்காரர் அந்நாட்டிற்கு சென்று புகைப்படம் எடுத்துள்ளார்.
இந்த புகைப்படங்களால் வடகொரிய மக்களின் அவலநிலை அம்பலமாகியுள்ளது.

அங்குள்ள மக்களின் ஏழ்மைநிலை, சாப்பாட்டிற்கு படும்பாடு, பஞ்சநிலை, குழந்தை பணியாளர்களின் கஷ்டம், பசியின் கொடுமையை தீர்த்துக்கொள்ள புற்களை தின்னும் ஏழை மக்கள் போன்ற காட்சிகளை அவர் புகைப்படம் எடுத்துள்ளார்.

இந்த விடயமானது, வடகொரிய சுப்ரீம் லீடர் கிம் ஜாங் அன் அரசுக்கு தெரியவந்துவிடவே இந்த புகைப்படங்கள் எல்லாவற்றையும் அவரிடம் இருந்து வாங்கி இராணுவவீரர்கள் அழித்துவிட்டனர். ஆயினும், எரிக்கின் டிஜிட்டல் கமெராவில் மெம்மரி கார்டில் இருந்த புகைப்படங்களை இராணுவவீரர்கள் கவனிக்கவில்லை, அந்த புகைப்படங்களை அவர் தற்போது வெளியிட்டுள்ளார். இவரது புகைப்படங்கள் வடகொரிய மக்களின் வாழ்வாதார நிலையை விளக்குகின்றன.

*பட்டினியால் வாடும் எலும்பும், தோலுமான மக்கள்.

*குழந்தை வேலையாட்கள் புல்லை தின்று பசியை போக்கி கொள்ளும் பரிதாபா நிலை.

*இராணுவ வீரர்கள், சாதாரண கூலியாட்களின் வேலையை செய்யும் பரிதாபநிலை.

*குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் கடின வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல், விவசாயம் மற்றும் கடின வேலைகளை செய்யும் சிறுவர்களின் பரிதாப நிலை.

*தெரு ஓரங்களில் விழுந்து சிதறி கிடக்கும் தானியங்களை சேகரித்து வயிறு வளர்க்கும் பரிதாபநிலை. போன்ற காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

# மெக்சிகோவில் வன்முறை போதை மருந்து கும்பலின் தலைவர் கொலை

(மெக்சிகோ சிட்டி)
மெக்சிகோவில் பிரபலமாக இருக்கும் செட்டாஸ் போதை மருந்து கடத்தல் கும்பல் வன்முறை செயல்களில் ஈடுபட்டுவந்ததினால் அரசு இந்த இயக்கத்தின் தலைவனைத் தேடிவந்தது. மெக்சிகோ ராணுவத்திலிருந்து ஓடிப்போன கல்டினோ மெல்லாடோ குரூஸ் என்பவனே அந்த இயக்கத்தின் தலைவனாக இருந்தான், இவன் ஞு-9 என்ற புனைப்பெயரில் அழைக்கப்பட்டான்.

ராணுவத்தின் எலைட் பிரிவில் இருந்த இவன் தற்போது வளைகுடா பகுதியில் செயல்பட்டுவரும் வன்முறை போதை மருந்துக் கும்பலின் தலைவன் ஒசியல் கார்டினாஸ் கைலனுக்கு உதவியாகப் பணி புரிந்து வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 5-ம் தேதி மெக்சிகோவின் வடகிழக்குப் பகுதி மாநிலமான டமாலிபாசில் ஏற்பட்ட வன்முறைக் கலவரத்தைத் தொடர்ந்து அங்கு 80க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறந்துபோனார்கள். இதனால் மெக்சிகோவின் புலனாய்வுத்துறை குருசின் நடமாட்டத்தைக் கவனித்து வந்துள்ளது.

ரெய்நோசா பகுதியில் குரூஸ் மறைந்திருப்பதை அறிந்த ராணுவம் நேற்று அவனது இருப்பிடத்தை சுற்றி வளைத்தது. மறைவிடத்தில் இருந்த பாதுகாப்பாளர்கள் இராணவத் துருப்புகள் மீது துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

இவர்களுக்கு உதவி செய்ய வெளியிலும் ஏராளமான ஆயுதமேந்திய கும்பல் வந்தது. இருப்பினும், சண்டையின் முடிவில் மெல்லாடோ குரூஸ் வீட்டினுள் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக தேசிய பாதுகாப்பு கமிஷனர் மான்டி அலேஜன்ட்ரோ ருபிடோ தெரிவித்தார்.

அமெரிக்காவின் எல்லைப்புறத்தில் செயல்பட்டுவந்த குற்றவியல் குழுவில் மெல்லாடோ இரண்டாவது இடத்தில் இருந்து வந்ததாக ருபிடோ தெரிவித்தார். செட்டாஸ் தவிர மற்றொரு குழு ஒன்றையும் அவன் செயல்படுத்தி வந்ததாகக் கூறிய ருபிடோ அது பற்றிய விபரங்களை வெளியிடவில்லை. டமாலிபாஸ் பிரிவுக்கான புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மெக்சிகோ அரசு இன்று தகவல் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.






# ஸ்டெதாஸ் கோப் உருவானது எப்படி?

கழுத்தில் ஸ்டெதாஸ்கோப்பை மாட்டிக் கொண்டு வலம் வருகின்ற டாக்டர்களை இன்னும் கொஞ்ச காலம்தான் பார்க்க முடியும். அது மட்டுமல்ல... ஸ்டெதாஸ்கோப்பையே வருங்காலத்தில் மியூசியத்தில்தான் பார்க்க வேண்டியிருக்கும். இது மருத்துவ அறிவியல் நிகழ்த்தப் போகும் மாயாஜாலம்!

கால் நூற்றாண்டுக்கு முன்பு கிராமபோனில்தான் பாட்டுக் கேட்டோம். பிறகு ஆடியோ கேசட் வந்தது அது போய் சி.டி. வந்தது இப்போது எம்.பி. 3, எம்.பி.4 என தொழில்நுட்பம் எகிறிக் கொண்டிருக்கிறது. அது மாதிரியே மருத்துவ உபகரணங்களிலும் அப்டேட் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. குழாய் வடிவத்தில் இருக்கின்ற ஸ்டெதாஸ்கோப்புக்குப் பதிலாக, ஸ்மார்ட் போன் மாடலில் ஒரு நவீன ஸ்டெதாஸ்கோப்பை இங்கிலாந்தில் உருவாக்கி இருக்கிறார்கள்.

இதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்பு இன்றைய ஸ்டெதாஸ்கோப்பின் ஹிஸ்டரியைப் பார்த்து விடலாம். 1816ல் "ரெனே லென்னக்" என்கிற பிரான்ஸ் டாக்டர் ஸ்டெதாஸ்கோப்பைக் கண்டுபிடித்ததே ஒரு சுவாரஸ்யம். இவர் காலத்தில் நோயாளியின் இதயத் துடிப்புகளைத் தெரிந்து கொள்ள டாக்டர்கள் தங்கள் காதுகளை நோயாளியின் மார்பில் நேரடியாக வைத்துக் கேட்க வேண்டும். ஆண் நோயாளிகளுக்கு இது ஓகே பெண்கள் சங்கடத்துக்கு உள்ளானார்கள். ஒருமுறை பருமனான ஒரு பெண் நோயாளியின் இதயத் துடிப்பைக் கேட்டே ஆக வேண்டிய கட்டாயம் லென்னக்குக்கு ஏற்பட்டது.

அவரின் நெஞ்சின் மீது லென்னக் தன்னுடைய காதை என்னதான் அழுத்தி வைத்துக் கேட்டாலும் இதயத் துடிப்பு பிடிபடவில்லை. அப்போதுதான் இதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்தார் லென்னக்.

1816 செப்டம்பர் மாதத்தில் ஒரு காலைப் பொழுதில் அவர், பாரிஸ் நகரில் லீ லோவர் அரண்மனையைச் சுற்றி வாக்கிங் சென்று கொண்டிருந்தார். அப்போது இரண்டு சிறுவர்கள் ஒரு நீளமான மரத்துண்டை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் அந்த மரத்துண்டின் ஒரு முனையைக் குண்டூசியால் கீறி ஒலி எழுப்பினான். இன்னொரு சிறுவன் மரத்துண்டின் மறுமுனையைத் தன் காதில் வைத்துக் கொண்டு அந்த ஒலியைக் கேட்டு குதூகலித்தான். பார்த்த லென்னக், "இதயத் துடிப்பைக் கேட்க இந்த வழியைப் பயன்படுத்தலாமே" என்று யோசித்தார். ஒரு நீண்ட பேப்பரைச் சுருட்டி உருளை மாதிரி செய்தார். அதை மிகவும் குண்டாக இருந்த ஒரு நோயாளியிடம் சோதித்துப் பார்த்தார்.



இரண்டடி நீளம் இருந்த அந்த உருளையின் ஒரு பக்கத்தை நோயாளியின் நெஞ்சிலும் மறு பக்கத்தைத் தன் காதிலும் பொருத்திக் கேட்டார். என்ன ஆச்சர்யம்... நோயாளியின் நெஞ்சில் நேரடியாக காதை வைத்துக் கேட்பதைவிட பல மடங்கு துல்லியமாகக் கேட்டது இதயத்தின் ஒலி. இதை அடிப்படையாக வைத்து 1819ல் மூன்றரை செ.மீ. விட்டமும் 25 செ.மீ. நீளமும் கொண்ட, ஒரு காதை மட்டுமே வைத்து கேட்கக் கூடிய மரத்தால் ஆன ஸ்டெதாஸ்கோப்பை லென்னக் தயாரித்தார். இதுதான் உலகம் கண்ட முதல் ஸ்டெதாஸ்கோப்! அதன்பிறகு அது பல பரிமாணங்களை எடுத்தது. 1843ல் இரு காதுகளை வைத்துக் கேட்கும் ஸ்டெதாஸ்கோப் உருவானது. ஸ்டெதாஸ்கோப்பின் முனையில் வட்டமாகவுள்ள "டயாஃப்ரம்" இதய ஒலிகளைக் கிரகித்து அதோடு இணைந்த ரப்பர் குழாய்க்குள் அனுப்புகிறது.

அங்கு இருக்கும் காற்று, இதயஒலி அலைகளைப் பெருக்கி, ஒருங்கிணைத்து அனுப்புவதால் அந்த ஒலிகளைத் துல்லியமாகக் கேட்க முடிகிறது. இதுதான் ஸ்டெ தாஸ்கோப்பின் அடிப்படைத் தத்துவம். கடந்த 200 ஆண்டுகளாக மருத்துவத்துறையில் ராஜ மரியாதையுடன் வலம் வந்துகொண் டிருக்கும் ஸ்டெதாஸ்கோப்புக்கு மாற்றாக இங்கிலாந் தில் "ஜெனரல் எலக்ட்ரிக் ஹெல்த் கேர் சிஸ்டம்" எனும் நிறுவனம் "விஸ்கேன்" என்கிற நவீன ஸ்டெதாஸ்கோப்பைத் தயாரித்துள்ளது. இது மருத்துவ உலகில் பெரிய மாற்றத்தை உண்டாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது எப்படி வேலை செய்கிறது?

வௌவால்கள் பறப்பதற்குப் பயன்படுத்தும் டெக்னாலஜிதான் இதிலும் பயன்படுகிறது என்கிறார் நிணி நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் இம்மெல்ட். வௌவால்கள் இருட்டில் பறக்கும்போது எதிரில் ஏதேனும் தடை உள்ளதா என்று தெரிந்து கொள்ள, அல்ட்ரா சவுண்டை உண்டாக்கிக் காற்றில் அனுப்பும். வழியில் தடை இருந்தால் அந்த ஒலி எதிரொலித்துத் திரும்பும். அதை உணர்ந்து, வௌவால்கள் திசை மாறிப் பறக்கும். ஒலிக்குண்டான இந்த தனித்தன்மையை அடிப்படையாக வைத்து விஸ்கேனை உருவாக்கியுள்ளோம்.

"விஸ்கேன்" சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் அளவுக்குச் சிறியது. இது பேட்டரியில் இயங்குகிறது. ஸ்மார்ட் போன் மாடலில் இருக்கும் இந்தக் கருவியில் ஒரு சிறிய திரை மற்றும் கீ பேடு உள்ளது. ஹேண்ட் மைக் அளவில் "டிரான்ஸ்டூசர்" எனும் கருவி இதில் இணைக்கப் பட்டுள்ளது. இதன் முனையை மார்பின் மீது வைக்க வேண்டும்.

அப்போது இது கேளாஒலி அலைகளை உற்பத்தி செய்து, இதயத்துக்கு அனுப்புகிறது. அவை இதயத்தில் மோதி, எதிரொலித்து வருவதை உள் வாங்கி, 3டி படங்களாக திரையில் பதிவு செய்கிறது. இதன் மூலம் இதயம் இயங்குவதை திரையில் பார்க்க முடியும். இதயத்துடிப்பு எண்ணிக்கை, லயம், இதய வால்வுக் கோளாறுகள், இதயத்தில் ரத்த ஓட்டம் போன்றவற்றை அடுத்த நிமிடத்தில் அறியலாம்.

டாக்டர்கள் இதய ஒலிகளைக் காதால் கேட்பதில்கூட சந்தேகம் வரலாம். இதில் சந்தேகம் என்பதே வராது. நோய்க்கணிப்பு மிகச் சரியாக இருக்கும். இக்கருவியைப் பயன்படுத்தி நுரையீரல் நோய்களையும் வயிறு நோய்களையும்கூட அறியலாம். தற்போதைய ஸ்டெதாஸ்கோப் முனை போல் டிரான்ஸ்டூசரின் முனையை மாற்றி அமைத்துவிட்டால், இது ஒரு கையடக்க ஸ்டெதாஸ்கோப் போல் காட்சி தரும் என்கிறார் அவர். கிரேட்!

# மடக்கும் சைக்கிள்



டெல்லியைச் சேர்ந்த 56 வயதான அபிதாப் பாண்டே, தாவரவியலில் முதுகலைப்பட்டம் பெற்றவர். ஓவியரும் கூட! நாடகக்கலையை தொழிலாகக் கொண்ட இவர், இந்திய மக்கள் நாடக சங்கத்தின் செயலாளராக இருக்கிறார். புரொபசர் யஷ்பாலின் அறிவியலைப் பரப்பும் இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர், Science Popularisation Association of Communicators and Educators (SPACE) என்ற அமைப்பைத் துவக்கினார்.

ஒரு முறை ஆட்டோ கிடைக்காதபோது, சைக்கிள் கடைக்குச் சென்று ஒரு சைக்கிள் வாங்கி வீட்டிற்கு செல்லத் தொடங்கிய பாண்டே, கடந்த ஐந்தாண்டுகளாக சைக்கிளில் செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளார். கார் பயணத்தை அறவே தவிர்த்து விடுகிறார். இவர் தினமும் வேலை க்குச் செல்வதே அலாதி அனுபவம். தனது வீட்டிலிருந்து மடக்கு சைக்கிளில் அருகிலுள்ள மயூர் விஹார் எக்ஸ்டன்ஷன் என்ற மெட்ரோ நிலையம் வரை செல்கிறார். பிறகு சைக்கிளை மடக்கி கையில் எடுத்துக் கொண்டு ரயிலில் ஏறுகிறார். ராஜீவ் சௌக் ரயில் நிலையத்தில் இறங்கி, மடக்கிய சைக் கிளை விரித்து, சைக்கிளில் பயணித்து பாரகாம்பா சாலை யிலுள்ள தனது அலுவலகத் தை அடைகிறார். ஹோட்டல் தாஜ் பேலஸிற்கு நிகழ்ச்சி ஒன்றுக்கு தனது மடக்கு சைக் கிளிலேயே சென்ற பாண்டே, அங்கே சொகுசு கார்களுக்கு மத்தியில் தனது சைக்கிளையும் நிறுத்திய போது அங்கிருந்த செக்யூரிட்டிகள் இவரைப் பார்த்த பார்வை ரொம்ப வினோதம் என்று அந் நிகழ்வை பகிர்கிறார். இவரிடம் சாலையில் ஓட்ட BINCHI PISTA சைக்கி ளும் மலை ஏற 4300 சைக்கிளும் உள்ளன. கூடவே மடக்கி வைத்துக் கொள்ளும் ஜிணி ஸிழி சிஐீ என்ற சைக்கிளும் வைத் திருக் கிறார்.

பாண்டேயின் மனைவியும் மகன்களும் விசேஷங்களுக்கு சொந்தக் காரில் செல்லும் போது, இவர் தனது மடக்கு சைக்கிளிலேயே பறக்கிறார். வேடிக்கை என்ன வென்றால், நகர போக்குவரத்து நெரிசல் களை சமாளித்து குறிப்பிட்ட இடத்திற்கு காருக்கு முன்பாகவே இவர் சென்றுவிடுவது தான். மொத்தத்தில் இவர் ஒரு சைக்கிள் காதலர். கூடவே சூழலில் காதலர் என்றும் சொல்லலாம். ஏனென்றால் இவர் கார் ஓட்டுவதும் இல்லை, அதன் மூலம் காற்றில் கார்பன்டை ஆக்ஸைடை நிரப்புவதும் இல்லை!.

# சூரிய கதிர்களை விட அதிக பிரகாசமான ஒளிக்கதிர் கண்டுபிடிப்பு

உலகிலேயே முதல் முறையாக சூரிய கதிர்களை விட அதிக பிரகாசமான எக்ஸ்ரே ஒளியை இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர். இதன் மூலம் 50 மில்லியன் ஆண்டு பழமையான தாவர படிமங்களையும் துல்லியமாக படம் பிடிக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்தின் மான்செஸ்டரில் உள்ள பிரிட்டன் பல்கலைக்கழகம் மற்றும் டயமண்ட் லைட் சோர்ஸ் நிறுவனம் இணைந்து அதிக பிரகாசமுள்ள ஒளி பற்றி ஆய்வு செய்தன. அதில் சூரிய ஒளியை விட பல மடங்கு அதிக பிரகாசமாக ஒளிரும் எக்ஸ்ரே கதிர்களை கண்டுபிடித்துள்ளன.

இது லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய படிமங்களையும் இந்த எக்ஸ்ரே ஒளிக்கதிர்கள் மூலம் துல்லியமாக ஆராய முடியும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தாவரத்துக்கும் அதே இனத்தை சேர்ந்த தற்போதைய தாவரத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், ரசாயன குணங்கள், அவற்றால் ஏற்படும் மாறுபாடுகள் குறித்து இந்த புதிய எக்ஸ்ரே கதிர்கள் மூலம் தெரிந்து கொள்ள முடியும் என்று விஞ்ஞானி பில் மேனிங் கூறுகிறார்.

# விண்வெளிக்கு ராக்கெட்டில் "பாப்" பாடப் போகும் லேடி ககா!



பாப் பாடகி லேடி ககா விண்வெளியில் பாடி இசை நிகழ்ச்சி நடத்த இருப்பதாக அமெரிக்கப் பத்திரிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் கவர்ச்சி பாப் பாடகியான லேடி ககாவிற்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர்.

தொடர்ந்து உலக நாடுகளில் பாப் இசை நிகழ்ச்சி வரும் இவர் விரைவில் விண்வெளியில் பாடல் பாடி இசை நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்ல மருத்துவர் சங்கம் யோசனை

(கொழும்பு)
இலங்கையில் சிகரெட் பக்கட்டில் எச்சரிக்கை அறிவித்தல் தொடர்பில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்வது தொடர்பாக ஆராய்வதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பின்படி சிகரெட் பக்கட்டுக்களில் 50-60 வீத எச்சரிக்கை அறிவித்தல் காண்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சுகாதார அமைச்சு 80 வீத அறிவித்தலை கோரியே வழக்கை தாக்கல் செய்திருந்தது. இந்தநிலையில் பொதுமக்களின் நலன்கருதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய உத்தேசிப்பதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

## உரிமைகளை பெற நைட்டிங்கேர்ல் கொள்கைகளை புறந்தள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது தாதியர் சங்கம்

(கொழும்பு)
தமது உரிமைகளை வெற்றிகொள்வதற்கு சில சந்தர்ப்பங்களில் நைட்டிங்கேல் கொள்கைகளை பின்தள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது. சர்வதேச தாதியர் தினம் மற்றும் தாதியர் சேவையின் ஆரம்ப கர்த்தாவான புலோரன்ஸ் நைட்டிங்கேல்லின் ஜனன தினத்தை நினைவு கூறும் நிகழ்வு நேற்று கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய, இரண்டொரு தினங்கள் தாதியர் சேவைகளை இடைநிறுத்தியேனும் பொதுமக்களின் எதிர்கால அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே கடந்த தினங்களில் செயற்பட்டதாக குறிப்பிட்டார். வேறு மாற்றுவழிகள் இல்லாத காரணத்தால் நைட்டிங்கேல் கொள்கைளை பின்தள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார். இதேவேளை, சுகாதார துறையில் தொழிற்சங்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.

உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். சுகாதார துறையில் ஒவ்வொரு குழுவினருக்கு இடையில் நட்புறவு பாதிக்கப்பட்டுள்ளமை சுகாதார சேவைக்கு பாதிப்பாக அமைந்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## மாணவியின் தலைமுடியை வெட்டிய ஆசிரியர்கள்

(கொழும்பு)
கண்டி வத்தேகம பிரதேசத்தை உள்ள வாவின்ன கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் இரண்டு ஆசிரியைகள் அப்பாடசாலையில் பயிலும் மாணவி ஒருவரின் தலைமுடியை வெட்டியதன் காரணமாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வத்தேகம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். பாடசாலையில் 6 ஆம் ஆண்டில் பயிலும் மாணவியே இந்த சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளார்.
மாணவியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர், தலா 25 ஆயிரம் ரொக்கப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## பல்கலைக்கழக மாணவர்கள் மீது மிளகாய்த் தூள் வீசித் தாக்குதல்


(கொழும்பு)
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மீது இன்று மிளகாய்த் தூள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாணவர் அடக்குமுறையை நிறுத்துமாறு கோரி, சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் மீது இன்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியா தோர் சிலரால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிளகாய்த் தூளை நீரில் கரைத்து மாணவர்கள் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் இரண்டு பிக்குக்ள உட்பட பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள்னர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் சம்பத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியெய்தாமை குறித்து ஆராய 10 பேர் அடங்கிய ஆணைக்குழு



கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியெய்தாமை குறித்த ஆராய்வதற்கு பத்து பேர் அடங்கிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நேற்று இந்தக் குழு நிறுவப்பட்டது.
சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் லட்சக் கணக்கான மாணவர்கள் சித்தியடைவதில்லை.

மாணவர்கள் கணித பாடத்தில் பின்னடைவை எதிர்நோக்குவதற்கான காரணங்களை கண்டறிந்து 60 நாட்களுக்குள் அறிக்கை சமர்பி க்குமாறு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊவா வெல்லஸ்ஸ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் இந்த ஆணைக் குழுவின் இணைத் தலைவர்களாக நியமிக்கபட்டுள்ளனர்.

2013ம் ஆண்டில் 112000 மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடைய வில்லை எனவும் இதனால் அவர்களினால் உயர்கல்வியைத் தொடர முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மணமகனை அழைத்து வந்த கார் பள்ளத்தில் பாய்ந்து விபத்து சிறுமி பலி

(கொழும்பு)
வத்தளையிலிருந்து பொகவந்தலாவ நோக்கி சென்ற கார் ஒன்று விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். கினிகத்ஹேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில், களனி கங்கையை அண்மித்த பகுதியில் வீதியை விட்டு விலகி 100 அடி பள்ளத்தில் கார் பாய்ந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் இன்று அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனா. இவ்விபத்தில் 8 வயது சிறுமி உயிரிழந்துள்ளதோடு மேலும் காயமடைந்த ஆறு பேர் கிதுல்கல தெலிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனா. இவர்கள் வத்தளை தெலங்கபான பிரதேசத்தை யுடைய ஒரே குடும்பத்தை சோந்தவாகள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளாகியவாகள் இன்று பொகவந்தலாவில் நடைபெறவிருந்த கல்யாணத்திற்காக மாப்பிள்ளையை அழைத்து வந்த குடும்பம் என கினிகத்ஹேன பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்ஹேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவத்தின் பிரதம அதிகாரியாக பிரசாத் சமரசிங்க நியமனம்

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மாதம் 16ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் சுயெற்சை படைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக பிரசாத் சமரசிங்க கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1980ம் ஆண்டு கெடட் அதிகாரியாக இராணுவத்தில் இணைந்து கொண்ட பிரசாத் சமரசிங்க, கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவராவார். பிரசாத் சமரசிங்க நீண்ட காலமாக இராணுவப் பேச்சாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## பாகிஸ்தான் உளவாளி இலங்கையிலும் நாசம் ஏற்படுத்தப்படலாமென எச்சரிக்கை

(கொழும்பு)
இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தானிய உளவாளி என்று கூறப்படும் இலங்கையரான சகீர் ஹுசைன் தொடர்பில் இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.ஹைர் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் இலங்கையின் விசாரணை அதிகாரிகளை சென்னைக்கு அனுப்பி, கூட்டு விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். எம்.எம்.ஹைர் முன்னர் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாகவும் தெஹ்ரானுக்கான தூதுவராகவும் பதவி வகித்தவராவார்.

இந்த நிலையில் அவர் விடுத்துள்ள குறிப்பு ஒன்றில், சகீர் ஹுசைன் கைது போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது அரசாங்கத்துக்கு அதனை ஆராய வேண்டிய கடமை இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் இந்த விடயத்தில் இந்தியாவுடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும். இது நாட்டுக்கு பாதுகாப்பை தேடிக்கொடுக்கும் உத்தியாக இருக்கும்.

ஏற்கனவே அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் விக்கிலீக்ஸ் அறிக்கையிலும் இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இடம் பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மகாபோதி மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் இஸ்லாமிய தீவிரவாதிகளே மேற்கொண்டனர் என்று இந்தியா சந்தேகம் வெளியிட்டிருந்தது.

எனவே இவ்வாறான சூழ்நிலையில் சகீர் ஹுசைனின் கைது மற்றும் அவர் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து உண்மையை அறிந்து கொள்ள வேண்டியது இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமான ஒன்று என்றும் ஹைர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லையேல் ஹுசைன் போன்ற தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இலங்கையிலும் நாசங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## சம்பூர் மகா வித்தியாலயம் மாணவர்களிடம் ஒப்படைக்கப்படுமா? கல்வியமைச்சிற்கு கடிதம்



கடற்படையினரின் பயிற்சி முகாமாக இயங்கி வரும் சம்பூர் மகா வித்தியாலயத்தை, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்குமாறு கோரி, இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.
அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
திருகோணமலை மாவட்டத்தின் தொன்மையினைப் பறைசாற்றி நிற்கும் பழம்பெரும் கிராமம், சம்பூர்க் கிராமமாகும். அக்கிராமத்தின் தொன்மையினை ஒத்ததாகவே, தி சம்பூர் மகாவித்தியாலயம் விளங்குகின்றது.

அப்பிரதேச மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டுவிளங்கும் தி சம்பூர் மகாவித்தியாலயம் கல்வித்துறையிலும் சாதனைகள் பலபடைத்து, இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கல்விமான்களையும், பழைய மாணவர்களையும் கொண்ட விருட்சமாக விளங்குகின்றது.
2006ம் ஆண்டு, விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகச் சம்பூர் பிரதேச மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகியது.
எனவே அன்றிலிருந்து இன்று வரை அப்பிரதேச மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல், அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.
நாங்கள் எமது கிராமத்திற்குச் செல்வதற்கு எப்போது விமோசனம் கிடைக்குமென எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துக் காத்திருந்து தங்கள் காலத்தை நகர்த்தியபடியே பலர் உறங்கியும் விட்டார்கள்.
கல்வித்துறையில் பல சாதனைகள் படைத்த இவ்வித்தியாலயம், 2006ம் ஆண்டு முதல், கடற்படையினரின் பயிற்சி முகாமாகவே இயங்கி வருகின்றது.
ஆனால் சம்பூர் மகாவித்தியாலயமோ, தற்பொழுது சேனையூர் மத்திய கல்லூரியின், மாணவர் விடுதியில் இயங்கி வருகின்றது.
இச்சந்தர்ப்பத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில், ஐந்நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதோடு, இச்சூழலிலும் தாங்கள் சளைத்தவர்களல்ல எனத் தமது திறமைகளை வெளிக்காட்டியும் வருகின்றனர்.

கற்றவர்கள் செறிந்துவாழும் எமது நாட்டில்,கற்கத்துடிக்கும் மாணவர்களின் ஆதங்கம் புரியவில்லையா? ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள்
இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, இயற்கைத் துறைமுகமும், பாரிய கடற்படைத் தளமும் அமைந்து காணப்படும்,உயர் பாதுகாப்பு வலயத்திலேயே பாடசாலையொன்று இயங்க முடியுமாகவிருந்தால் சம்பூரில் ஏன் பாடசாலை இயங்கமுடியாது?

எனவே, கல்விமான்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தி சம்பூர் மகாவித்தியாலயத்தை அதே இடத்தில் இயங்கச் செய்ய முன்வர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



**ஜனாதிபதி** வெற்றிபெறுவார் என்று தெரிவித்தது.
இரண்டாவது குழு பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் 120 முதல் 125 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறும் என்று தெரிவித்தது. இதனையடுத்தே ஜனாதிபதி ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் அழைத்து கடந்த வாரம் வெள்ளிக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தவிருந்தார்.
எனினும் அது 11வது மணித்தியாலத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

**பிரிய மனமின்** மன்மோகன் சிங்குக்கு இன்று பிரதமர் அலுவலக ஊழியர்கள் பிரியாவிடை கொடுத்தனர்.
பிரதமர் பதவியை 10 ஆண்டு காலமாக வகிக்கும் மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலகம் பிரியாவிடை வழங்கிய நிகழ்வு மிகவும் நெகிழ்ச்சிக்குரியதாக இருந்தது.
"உங்கள் அனைவரின் பணிகளுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பார்" என்று பிரதமர் அலுலக ஊழியர்களிடம் நெகிழ்ச்சியுடன் கூறினார் மன்மோகன் சிங்.
ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கை, ஊழியர்கள் சிலர் கண்ணீர் மல்க வழியனுப்பினர்.

அப்போது, பிரதமர் மன்மோகன் சிங்குடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன்,. முதன்மைச் செயலர் புலோக் சாட்டர்ஜி, பிரதமரின் ஆலோசகர் டி.கே.ஏ. நாயர் மற்றும் பிரதமரின் ஊடக் ஆலோசகர் பங்கஜ் பச்செளரி ஆகியோர் உடன் இருந்தனர்.

**உயர்தரம்** அரசியல் நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார்.
அமைச்சர் விமலின் இந்த கருத்திற்கு எஸ்.பி.திஸாநாயக்க இன்று பதிலளித்தார்.
அமைச்சர் விமல் வீரவன்சவால் ஜய வேவா மாத்திரமே சொல்ல முடியும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
அமைச்சு செயலாளர் என்பது சாதாரண பதவி அல்ல எனவும் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர்கள் அதில் இருப்பதாகவும் அவர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் அளிக்கப்படுவதாகவும் எஸ்.பி. சுட்டிக் காட்டினார்.

அமைச்சர் மற்றும் செயலாளருக்கு இடையில் காணப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் ஒருவர் சட்டவிரோத செயலுக்கு அனுமதி கோரினால் .அதனை நிராகரித்து விளக்கம் அளிக்கும் அதிகாரம் அமைச்சு செயலாளர்களுக்கு இருப்பதாகவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
பிபி.ஜயசுந்தர என்பவர் பொருளாதார நிபுணத்துவம் பெற்ற, நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றச் செயற்படும் நபர் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிபி.ஜயசுந்தர என்பவர் இலங்கையின் பொருளாதார கொலையாளி எனவும் அவர் சந்திரிக்கா ஆட்சியில் அரச நிறுவனங்களை விற்றவர் எனவும் சிறையில் இருக்க வேண்டியவர் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**காலம்** காணமல் போன பல ஆயிரக்கணக்கான போராளிகள், பொது மக்களின் உறவினர்களில் 12 பேர் மட்டுமே இந்த ஆட்கொணர்வு மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறு இந்த 12 பேரினாலும் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 05.06.2014 இல் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. அன்றைய நாளில் இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பினை விரைந்து வழங்கக் கோரி முல்லைத்திவு மாவட்ட நீதிமன்ற வளாக முன்றலில் இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்தில், சிறீலங்கா அரசினால் காணாமல் போக செய்யப்பட்ட போராளிகள் மற்றும் பொது மக்களின் உறவினர்கள், அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பொது மக்கள் அனைவரையும் கலந்துக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக உங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றார்கள் பாதிக்கப்பட்ட மக்கள்.







**மக்களை** நிலையில் வெயிலில் காய வேண்டிய அவசியமில்லை.

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சுதந்திரமாக மே தினக் கூட்டங்களை நடாத்திய தரப்பினர், நாட்டில் சுதந்திரம் இல்லை என சர்வதேசத்திடம் முறைப்பாடு செய்கின்றனர். நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்கு இடமில்லை எனத் தெரிவிக்கும் தரப்பினர் அலரி மாளிகைக்கு முன்னால் சுதந்திரம் எங்கே எனக் கேள்வி எழுப்பி போராட்டம் நடத்துகின்றனர்.

கடந்த காலங்களில் போராட்டங்களில் ஈடுபட்டு அடி வாங்கியவர்களும், அடித்தவர்களும் அவற்றை மறந்து விட்டனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். விளக்கேந்திய சீமாட்டி எனப் போற்றப்படும் புளோரன்ஸ் நைட்டின் கேளின் சிரார்த்த தினம் உலகத் தாதியர் தினமாக கொண்டாடப்படுகின்றது.

**உறவுகளுக்கு** தனிப்பட்டவர்கள் சமய நிகழ்வுகளை நடத்தலாம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தநிலையில் அரசாங்கம் போர் முடிவுக்கு வந்ததாக கூறும் மே 18 ஆம் திகதியன்று மாத்தறையில் கொண்டாட்ட நிகழ்வை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாப்பரசர்** மதங்களிடையே மோதல்கள் கிடையாது. ஒரு சில அடிப்படைவாத மதச் சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாகவே சிறு சிறு பிரச்சினைகள் தலைதூக்குகின்றனவே தவிர, முழு நாட்டிலும் மத நல்லிணக்கம் காணப்படுகிறது.

எனவே, இங்கு மத நல்லிணக்கம் இல்லையென்று கூறிய கருத்துகளுக்கு பாப்பரசர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாப்பரசர் உலகம் மதிக்கும் ஒரு மதத்தலைவர். அவர் இங்கு வரலாம். ஆனால், எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடக்கூடாது.
எமது நாடு தொடர்பில் கருத்துகளையும் வெளியிடக்கூடாது. இங்கு வரலாம், போகலாம். ஆனால், இலங்கையில் எந்தெந்த பிரதேசத்திற்கு பாப்பரசர் போக வேண்டும். யார் யாரை சந்திக்க வேண்டுமென்பதை அனைத்தையும் அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இலங்கை தொடர்பிலான பிழையான கருத்துகளுக்கு அவர் இரையாகி விடுவாரென்றும் இராவணா சக்தியின் தலைவர் இத்தேகந்தே தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

**குற்றவாளியைக்** விமல் வீரவன்ச தெரிவித்தார்.
நேற்று முன்தினம் தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
ஜனாதிபதி வசமுள்ள நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கும் அவரது அமைச்சர்களுக்கும் உரியது என்ற போதும், பிபி.ஜயசுந்தர அந்த அதிகாரங்களை தவறான வகையில் பயன்படுத்துவதாக விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.
நாட்டுக்கு கடன் குவிக்கப்பட்டு அதன் பலன் சில குடும்பங்களுக்கு செல்வதாகவும் ஆனால் நாட்டின் சாதாரண மக்களுக்கே பொருளாதார பிரதிபலன் சென்றடைய வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.
பிபி.ஜயசுந்தரவிற்கு பதிலாக நாட்டை நேசிக்கும் பொருளாதார நிபுணர் ஒருவரை அப்பதவியில் இருத்த முடியாமல் போனது இந்த அரசாங்கத்தின் முழுமூடச் செயல் மற்றும் வெற்றுத்தனமே அன்றி வேறில்லை என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பிபி.ஜயசுந்தரவிற்கு அரசாங்கழ் பயந்துள்ளதாகவும் தீர்மானம் முடிவு எடுப்பவர்களும் அவருக்கு பயம் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

**நீதிகோரி** பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன் தொடர் கவனயீர்ப்பு நிகழ்வொன்று, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் மற்றும் பண்பாட்டு விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன் தொடங்கியுள்ள கவனயீர்ப்பு நிகழ்வானது மே12 நாள் திங்கட்கிழமை முதல்வாரம் முழுவதும் காலை 9:00 மணி முதல் மாலை 9:00 மணிவரை இடம்பெறுகின்றது.

கண்காட்சி, சிறிலங்கா புறக்கணிப்பு விழிப்பூட்டல் பரப்புரை, துண்டுப்பிரசுர விநியோகம், கவிதை, உரை என பல்வேறு வடிவங்களில் ஈழத் தமிழினத்துக்கு நடந்தேறிய இனப்படு கொலைக்கு பரிகாரி நீதிகோர அமையும் இந்த கவனயீர்ப்பு நிகழ்வில் ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்கு தெருவெளி நாடகமும், சுடரேந்திய வணக்க கூடலும் இடம்பெறுகின்றது.

இதேவேளை வரும் மே17ம் நாள் சனிக்கிழமை லண்டனில் இடம் பெறவுள்ள சிறிலங்கா புறக்கணிப்பு மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லி அணி வெளியேற்றம் பயிற்சியாளர் கிரிஸ்டன் வேதனை




ஐ.பி.எல். கிரிக்கெட்டில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் செயல்பாடு மோசமாக இருக்கிறது. அந்த அணி 9 ஆட்டத்தில் விளையாடி இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 4 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் இருக்கிறது.
இதனால் அடுத்து சுற்று வாய்ப்பை டெல்லி அணி ஏறக்குறைய இழந்து விட்டது. லீக் சுற்றுடன் அந்த அணி வெளியேறுகிறது. இந்த மோசமான செயல்பாடு குறித்து டெல்லி அணியின் பயிற்சியாளர் கேரி கிரிஸ்டன் கூறியதாவது:
டெல்லி அணியின் பேட்டிங், பந்து வீச்சு இரண்டிலும் தோல்வி அடைந்து விட்டது. இதனால்தான் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறும் நிலை வந்து விட்டது. நிலையான பேட்டிங்கை நாங்கள் அளிக்கவில்லை.
நாங்கள் பல துறையிலும் முன்னேற்றம் காண்பது அவசியம்.
வெற்றி பெற நல்ல பார்டனர்ஷிப் தேவை. கெவின் பீட்டர்சன் கேப்டன் பதவியில் சிறப்பாகவே செயல்படுகிறார். அவர் மற்ற வீரர்களுக்கு முன் உதாரணமாக இருந்து ஆலோசனைகள் வழங்குகிறார்.

# பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சு ஆலோசகராக முஷ்டாக் அகமது நியமனம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் 2 வது முறையாக பதவி ஏற்கிறார்.
இந்த நிலையில் பாகிஸ்தான் அணிக்கு சுழற்பந்து வீச்சு ஆலோசகராக முன்னாள் டெஸ்ட் சுழற்பந்து வீச்சாளர் 43 வயதான முஷ்டாக் அகமது நியமிக்கப் பட்டுள்ளார்.
இதற்கான போட்டியில் சக்லைன் முஷ்டாக்கும் இருந்தார்.
ஆனால் பயிற்சி கமிட்டி, முஷ்டாக் அகமதுவின் பெயரை பரிந்துரை செய்ததால் அவர் அந்த பொறுப்புக்கு அமர்த்தப் பட்டுள்ளார்.

# பிராட்மேனின் பேட் மீண்டும் ஏலம்




கிரிக்கெட்டின் பிதாமகன் என்று அழைக்கப்படும்

ஆஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மேன் முதல்முறையாக பயன்படுத்திய பேட் மீண்டும் ஏலத்திற்கு வருகிறது. 1928 ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் தனது டெஸ்ட் வாழ்க்கையை தொடங்கிய போது பயன்படுத்திய பேட்டை அவர் 1930 ம்ஆண்டு சிட்னி சன் பத்திரிகைக்கு வழங்கினார்.

பிறகு அது நல நிதி திரட்டுவதற்காக ஏலம் விடப்பட்டது. இப்போது அந்த பேட்டை வைத்துள்ள ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நபர், மீண்டும் விற்க முடிவு செய்துள்ளார். இந்த பேட் ரூ.80 லட்சம் வரை ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிராவோக்கு பதிலாக சென்னை அணியில் டேவிட் ஹஸ்சி



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர வீரராக வெஸ்ட் இண்டீசை சேர்ந்த வெய்ன் பிராவோ திகழ்ந்தார். பேட்டிங், பவுலிங், பீல்டிங் என அனைத்து துறையிலும் சிறப்பாக செயல்பட்டு சென்னை அணியின் முதுகலும்பாக திகழ்ந்தார்.

இதனால் அவரை ஏலத்தில் விடாமல் சென்னை அணி தக்க வைத்து கொண்டது. இந்த நிலையில் 7வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பிராவோ காயம் அடைந்தார்.
கடந்த ஏப்ரல் 18ந் தேதி அபிதாபியில் நடந்த பஞ்சாப்புக்கு எதிரான போட்டியின் போது தோள்பட்டையில் காயம் அடைந்தார். இதனால் எஞ்சிய போட்டியில் இருந்து பிராவோ விலகினார்.
இதையடுத்து பிராவோவுக்கு பதில் வேறு ஒரு வீரரை தேர்வு செய்ய சென்னை அணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் எந்த வீரர் தேர்வு செய்யப்படுவார் என்பதை சென்னை அணி நிர்வாகம் அறிவிக்காமல் இருந்தது.


இந்த நிலையில் பிராவோவுக்கு பதிலாக ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆல் ரவுண்டர் டேவிட் ஹஸ்சி இடம் பெறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலத்தில் டேவிட் ஹஸ்சியை எந்த அணியும் கண்டு கொள்ளவில்லை. தான் ஏலம் போகாததால் அவர் கடும் ஏமாற்றம் அடைந்து இருந்தார். ஆனால் திடீர் அதிர்ஷ்டசமாக சென்னை அணியில் இடம் கிடைத்து உள்ளது. இது தொடர்பாக அவர் டுவிட்டரில், தற்போதுதான் எனக்கு அற்புதமான செய்தி ஒன்று வந்துள்ளது என்று குறிப்பிட்டு உள்ளார்.

சென்னை அணியில் இடம் பெறுவதை அவர் மறைமுகமாக தெரிவித்து உள்ளார்.
டேவிட் ஹஸ்சி இடம் பெறும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

டேவிட் ஹஸ்சியின் சகோதரர் மைக் ஹஸ்சி சென்னை அணியில் விளையாடி வந்தார். அவரை இந்த ஆண்டு ஏலத்தில் மும்பை அணி எடுத்தது.

# தாமதமாக வரும் விமானங்களுக்கு அபராதம்



பிரேசில் நாட்டில் வரும் ஜூன் 12-ம் தேதி முதல் ஜூலை 13-ம் தேதி வரை உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற உள்ளன.
இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
போட்டிகளை கண்டுகளிப்பதற்காக உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்கள் விமான டிக்கெட் முன்பதிவு செய்துள்ளனர்.

போட்டிகளை காண சுமார் 6 லட்சம் வெளிநாட்டு ரசிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவர்களின் விமானம் தாமதமாக வந்தால், 40 ஆயிரம் டாலர் வரை அபராதம் விதிக்கப்படும் என்று பிரேசில் விமான போக்குவரத்து துறை எச்சரித்துள்ளது.

சர்வதேச விமானங்கள், உள்நாட்டு விமானங்கள் மட்டுமின்றி தனியார் விமானங்களுக்கும் இந்த அபராதம் பொருந்தும் என்று தேசிய விமான போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.


மிகக் குறைந்த கட்டணத்தில் புதியவனில் விளம்பரம் செய்யுங்கள்

தேசிய நாளிதழ்களுக்கு நிகராக மன்னாரில் இருந்து வெளிவரும்
புதியவன் நாளிதழில் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களை வெளியிடலாம்

வீடு, காணி விற்பனை
வீடு, கடை வாடகை
வாகன விற்பனை/வாடகைக்கு
திருமண சேவை
செல்லப்பிராணிகள் விற்பனைக்கு
கல்விச் சேவை

ஆகிய வற்றுக்கான விளம்பரங்களை வெறும் 400/= ருபாவில் இருந்து பிரசுரிக்கலாம்.

மரண அறிவித்தல், 31ஆம் நாள் அறிவித்தல். ருபாய் 500/= மட்டுமே.

ஏனைய அனைத்து விளம்பரங்களுக்கும் ருபா 500/= இல் இருந்து

இன்றே அழையுங்கள். உங்கள் அனைத்து வியாபாரத் தொடர்புகளும் நன்றே பெருகிட வாருங்கள் புதியவன் அலுவலகத்திற்கு இல்லையேல் அழையுங்கள் கீழ்வரும் அலைபேசி இலக்கங்களை

விளம்பரப்பிரிவு
புதியவன்
பிரதான வீதி, மன்னார்.
023 2223545/077 7802720
0771770503


# காங்கோ நாட்டில் கால்பந்து மைதானத்தில் நெரிசலில் சிக்கி 15 பேர் பலி




ஆப்பிரிக்க நாடான காங்கோ தலைநகர் கின்ஷசாவில் கால்பந்து போட்டி நடந்தது. அதில், கின்ஷசா அணியும், லுபும் பாஷி நகர அணியும் மோதின. முடிவில் லுபும்பாஷி அணி கின்ஷசா அணியை 10 கோல் கணக்கில் வென்றது. இதனால் கின்ஷசா அணி ரசிகர்கள் கடும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்து ரகளையில் ஈடுபட்டனர்.
அதை தொடர்ந்து ரகளையில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் தடுத்தனர். அப்போது 4 போலீசார் தாக்கப்பட்டு காயம் அடைந்தனர். எனவே கலவரக்காரர்களை கட்டுப்படுத்த போலீசார் கண்ணீர் புகை, குண்டுகளை வெடித்தனர்.
இதனால் கால்பந்து போட்டியை காண வந்திருந்த பொது மக்கள் மைதானத்துக்கு வெளியே ஓடினர். ஆனால் வாசல் குறுகியதாக இருந்ததால் உடனே அனைவரும் வெளியேற முடியாததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

அதில் சிக்கி 15 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். 24 பேர் காயம் அடைந்து. அங்கு அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.
காங்காகோவிலில் கடந்த மாதம் இசை திருவிழா நடந்தது. அப்போது ஏற்பட்ட மின்தடை காரணமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கி 21 பேர் பலியாகினர்.

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தில் 14.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org